# JANAVINODINI.

# ஜநவிநோதிநி.

இல. 8.] ஆகஸ்ட்மீ 1890. [புஸ்த. XXI.


CONTENTS.


Reflections on Alchemy and Astrology ........................ 169

Catechism on various subjects (*Continued*):—(*The natural history of the Elephant, and a number of anecdotes illustrative of its qualities*) ........................ 175

The Life of a Bear, Chapter XXIII. ........................ 182

Scientific and historical explanations of a few ceremonies connected with Hindu marriages (*Continued*) ........................ 186

Modes of death ........................ 189

News and Notes ........................ 192


அட்டவணை.


இரஸவாதத்தையும் ஜோதிடத்தையும் பற்றிய சில அபிப்பிராயங்கள் 169

விவிதவிஷயவிளக்கவினாவிடை (தொடர்ச்சி):— (யானையின் குணங்களும் அவற்றை விளக்கத்தக்க சில விர்த்தாந்தங்களும்.) 175

ஓர் கரடியின் கதை, 23-ம் அத்தியாயம் ........................ 182

இந்து விவாகச் சடங்குகள் சிலவற்றின் சாஸ்திரோக்த சரித்திர பூர்வக விவரணம் (தொடர்ச்சி) ...... 186

மரணவகைகள் ........................ 189

வர்த்தமானக் குறிப்புகள் ........................ 192



MADRAS.

Published by the

MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

OLD COLLEGE, NUNGUMBAKAM.

# ஜநவிநோதிநி.

இல. 8.] ஆகஸ்ட்மீ 1890. [புஸ்த. XXI.

## இரஸவாதத்தையும் ஜோதிடத்தையும்பற்றிய சில அபிப்பிராயங்கள்.

இரஸவாதம் என்னும் வித்தையொன்றிருப்பதாக உலகத்தில் அநேகஜாதியார் நம்புகிறார்களல்லவா? இரஸம் என்னும் ஒருபொருள் வெண்மையாகவும் நீர்மயமாகவும் இருக்கிறதென்பதை யாவரும் அறிவார்கள். அதைநெருப்பில் வைத்தால் ஆவியாய்மறைந்து இடைகுறைகின்றது. ஓரிடத்தில் சிறிதுநேரங்கூடநிலையாய் நிற்காமலும் எந்தப்பொருளையும் பற்றாமலுமிருக்கிற மஹாவிசித்திரமாயுள்ள இந்தவஸ்துவை வாதிக்க (கட்ட)ச்செய்வோமாகில் அதுஸ்பரிசவேதியாகுமென்பதும், அதைக்கொண்டு இரும்பு-பித்தளை-செம்பு-வெள்ளி முதலிய தாழ்ந்த உலோகங்களை மேலானவிலையுயர்ந்த உலோகமாகிய பொன்னாக்கலாமென்பதும் அந்தசாஸ்திரத்தின்சித்தாந்தம். இந்தசாஸ்திரம் முற்றும் பொய்யென்றாவது மெய்யென்றாவது யாம் இங்கு கூறவரவில்லை. ஒவ்வொருபுருஷனும் அடையவேண்டிய அறுபத்துநான்குகலைஞானங்களுக்குள்ளே இரஸவாதமும் ஒன்றென்பதே பூர்வீக ஆரியர்களுடைய துணிபாகும். சில பௌதிகப்பொருள்களுக்கு இயற்கையிலமையாத சில குணவிசித்திரங்கள் செயற்கையினாலே யுண்டாகின்றனவென்பதை (Chemistry) கெமிஸ்ட்ரி என்னும் இரஸாயனசாஸ்திரத்தால் பிரத்தியட்சமாக நாம் இப்போதுங்காணலாம். இப்போது பெரும்பாலும் ஐரோப்பியர்கள் கையாண்டுவரும் இரஸாயனசாஸ்திரம் இன்னும் இளம்பருவத்திலேயே இருக்கிறபடியால் அந்த சாஸ்திரம் இன்னும் அபிவிர்த்தியடைந்து சாஸ்திரிகள் ஆராய்ச்சிசெய்யச்செய்ய, நெடுங்காலமாய் உலகத்தார் நம்பியிருக்கும் ஸ்பரிசவேதியென்னும் விசித்திரமான பொருளைக்கண்டுபிடித்தலுங்கூடும். ஆகாயத்திலுள்ளநட்சத்திரங்களின் இயக்கத்தினாலே மானிடருடையகுணாகுணங்களும் சுகதுக்கங்களும் பாதிக்கப்படுகின்றனவென்னுங் கோட்பாட்டைவிளக்கும் ஜோதிடத்தையும் இரஸவாதத்தைப்போலவே நெடுங்காலமாக உலகத்தில் அநேகஜாதியார் நம்பிவருகின்றனர். இந்தசாஸ்திரமும் பொய்யென்றாவது மெய்யென்றாவது யாம் கூறவரவில்லை. இதுவும் அறுபத்துநான்குகலைஞானங்களுக்குள்ளொன்

றென்பதே பூர்வீக ஹிந்துக்களுடையதுணிபு. ஆனால் இரஸவாதத்திலும் ஜோதிடத்திலும் மஹாநிபுணர்களென்று வெளிவருபவர்களுக்குள்ளே பெரும்பான்மையோர் சாதாரணஜனங்களை வஞ்சிக்கத்தக்கவர்களாயிருக்கிறார்களென்பதையே இங்கு யாம்நாட்டமுயல்வது. இரஸவாதம்செய்வதாக நடிக்கும் சிலவேஷதாரிகள் தங்களுடைய சாமர்த்தியத்தைக்காட்டிப் பிறரிடத்தில் யாசிக்கத்தலைப்படுகிறார்கள். அவர்களுக்கு வாஸ்தவத்தில் அப்படிப்பட்டசாமர்த்தியமிருக்குமானால் அவர்கள் யாசிக்கவேண்டிய அவசியமில்லையே. "ஐயா! உமக்கு எப்போதும் பசியெடுக்காமலிருப்பதற்கு நான் ஒருநல்லஔஷதந்தருகிறேன், எனக்கு இப்போது சிறிது அன்னமிடு." என்றுஒருவன் ஒருபிரபுவை நோக்கி யாசிப்பானாகில் உடனே அந்தப்பிரபு அவன்வார்த்தையில் நம்பிக்கைவைத்து அவனுக்கு அன்னமிட்டு அவன்கொடுக்கும் ஔஷதத்தை வாங்கிக்கொள்ளுகிறபட்சத்திலே அந்தப்பிரபுவைவிட அவிவேகி ஒருவருமிலரென்று பள்ளியிற்பயிலுஞ் சிறு மகவும் நகையாநிற்கும். ஏனெனில், பசியாமலிருப்பதற்கேற்ற ஔஷதம் வைத்துக்கொண்டிருக்கும் அந்த யாசகன் அந்த ஔஷதத்தைக்கொண்டு தன்பசியைத்தணித்துக்கொள்ளலாகாதா? இவ்வாறே ஸ்பரிசவேதியைவைத்துக்கொண்டு விலையற்றபொருள்களை விலையுயர்ந்த பொன்னாக்குவேனென்று ஒருவன் சொல்வானாகில் அவனுடையவார்த்தையில் நம்பிக்கைவைப்போரும் மதிமோசம் போனவர்களேயாவார். இரஸவாதத்தில் சாமர்த்தியர்களென்று நடிக்கும் சில வேஷதாரிகள் நாகப்பூச்சிகளையெடுத்து அவற்றிற்குள் சிறு பொற்கம்பிகளை நுழைத்து மடக்கி ஒருவருக்குந்தெரியாமல் வைத்திருந்து, உலர்ந்தபின் அவைகள் ஸ்பரிசவேதியென்னும் மூலிகைகளெனப்பொய்யுரைத்து, செம்புமுதலிய உலோகங்களின் சிலதுண்டுகளை நெருப்பிலிட்டு, அவைகளைப் பொன்னாக்கிவிட்டதுபோல் நடித்து, அப்பூச்சிகளுக்குள்ளே வைத்திருந்த பொற்கம்பிகளையெடுத்துக்காட்டிவருகிறார்கள். மற்றும் சிலர்சிலகரித்துண்டிலே துவாரஞ்செய்து அதில் சிறிது பொன்னைவைத்திருந்து மற்றக்கரிகளோடு அதைத்தந்திரமாய்ச்சேர்த்து "இதோ பொன்வந்துவிட்டது, பார்." என்றுகாட்டி மோசம்பண்ணிவருகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் பேராசையுள்ள மூடஜனங்களை வஞ்சித்து அதிக பொருள்தேடுவதற்காக முன்னே சிறிதுபொருள் செலவுசெய்வது அவசியந்தான். மெய்வருந்தி நாணயமாய் வேலைசெய்து பொருள் சம்பாதிக்கவகையற்ற சோம்பரே பெரும்பாலும் இரஸவாதவித்தைக்கலைந்திடுவதை நாம் உலகத்திற் கண்கூடாகக்காணலாம். இரஸவாதசாஸ்திரத்தில் பூரணநம்பிக்கையும், தெய்வபக்தியும், நிராசையுமுடைய சில நல்லோர் இரஸவாதவித்தையைப்பற்றி அடியில்வருமாறு அபிப்பிராயந்தெரிவிக்கிறார்கள்:—

"இல்லதுவாராது, உள்ளதுபோகாது." என்னும் பழமொழியின் கருத்தை யோசிக்கவேண்டும்; ஸ்பரிசவேதியென்னும் ஒருபொருள்

முக்காலத்தும் இல்பொருளாயிருக்குமானால் அப்படிப்பட்டதொன்று உள்ளதாக ஏன் உலகத்தார் நெடுங்காலமாய் நம்பிவரவேண்டும்? பொன்னனையாளென்னும் ஒருதாசி முன்னொருகாலத்தில் தன்னுடைய ஆத்மார்த்தமாகிய திருப்பூவணநாதரென்னும் ஸ்வாமிக்கு ஒருவிக்கிரகமூர்த்தம் செய்தமைக்கவேண்டுமென்று விருப்பமுற்று அதற்குப் பொருள் போதாமையாலே துக்கப்பட்டுக்கொண்டிருக்கையில், சோமசுந்தரக்கடவுள் ஒரு சித்துபுருஷராக அப்பெண்மணியினிடத்துவந்து அவளிடத்திருந்த பித்தளை-ஈயம்-செம்பு-இரும்பு-வெள்ளி-வெண்கலம் முதலிய தாழ்ந்த உலோகங்களைக்கொண்டுவரும்படி ஆஞ்ஞாபிக்க, அவளவ்வாறேதன்னிடத்திருந்த தாழ்ந்த உலோகங்களையெல்லாம் கொண்டுவந்துவைத்தபோது அவர் அவைகளின்மேல் ஏதோநீற்றைச்சிறிதுதூவி அவளைப்பார்த்து, பெண்ணே! இந்த உலோகங்களையெல்லாம் தீயிலிட்டு இன்றிரவுமுழுவதும் வைப்பாயாகில் இவைகள்பொன்னாகும், நீ அவற்றைக்கொண்டு உன்விருப்பத்தின்படி திருவுருவமைத்துக்கொள்ளலாமென்று சொல்லி மறைந்தனரென்றும், அவரிட்டகட்டளையின்படியே அப்பொன்னனையாள்-

"மறைந்துபோயினனெனச்சிறிதயர்ச்சியுமனத்தி
னிறைந்ததோர்பெருங்கவற்சியைநீக்கினளொன்னாச்
சிறந்ததோர்பெருமகிழ்ச்சியுமுடையளாய்ச்சித்த
ரறைந்தவாறுதீப்பெய்தனளுலோகங்களனைத்தும்."

"அழலடைந்தபினிருண்மலவலிதிரிந்தரன்ற
ணிழலடைந்தவர்காட்சிபோனீப்பருங்களங்கங்
கழலவாடகமானதாலதுகொண்டுகனிந்த
மழலையீர்ஞ்சொலாள்கண்டனள்வடிவிலான்வடிவம்." என்றபடி

அந்த உலோகங்களையெல்லாம் தீயிலிட்டு அன்றிரவு முழுதும் வைத்துக் காலையிலெழுந்து பார்க்கும்போது அவைகள் மாசு நீங்கிப் பொன்னாயிருக்கக்கண்டு மகிழ்ச்சியெய்தித் திருவுருவமைத்துத் தன் விருப்பத்தை நிறைவேற்றிக்கொண்டனளென்றும்ஆலாஸ்யமான்மியமென்னுந் திருவிளையாடற்புராணத்திற் கூறியிருக்குஞ் சரித்திரத்தை ஆராயுமிடத்து, இரஸவாதமென்பது உண்டென்றேதோன்றுகிறது. ஆனால் ஒருவன்பேராசையினாலே தன்னுடையஆக்கம் ஒன்றையே கருதி இரஸவாதம் செய்யத்தலைப்படுவானாகில் அது அவனுக்கொரு போதும் சித்தியாவதில்லை. அவ்வாறின்றி ஒருவன் சுயப்பிரயோசனத்தை அணுவளவேனுங்கருதாதவனாகிப் பரோபகாரார்த்தமாகச் சிறந்த தேவாலயங்கள்-சத்திரங்கள்-தடாகங்கள் முதலியவற்றையமைக்க உத்தேசிப்பானாகில்.அப்போதுமாத்திரம் அவனுக்கு அந்தசாஸ்திரம் கைகூடிவரும். இப்படிப்பட்ட விசித்திரமானபொருள் ஏதேனும் சித்தித்திராவிட்டால் சகலபற்றுக்களையும்விட்டொழித்த யதிகள்-சந்நியாசிகள்-வைராகிகள் ஆகிய இவர்கள் முற்காலத்திலே பரோபகாரார்த்தமாகவேங்கடம், ஸ்ரீரங்கம் முதலிய திவ்வியதிருப்பதிகளில் தேவாலய

ங்கள்-அன்னசத்திரங்கள்-தடாகங்கள் முதலியவற்றை அமைத்தேயினார்.”

மேலே யாம் உதகரித்துக்காட்டிய அபிப்பிராயத்தைப் பரியாலோசித்துப்பார்க்கையில், இரஸவாதசாஸ்திரம் முக்காலத்தும் மெய்யென்றுநம்புகிறவர்களும் சுயப்பிரயோசனமற்றபெரியோருக்கே அது சித்தியாகுமென்று ஒப்புக்கொள்ளுகிறார்களெனத் தெரியவருகிறது. அப்படியிருக்கையில், ஏனோ சிலசாதாரணஜனங்கள் சுயப்பிரயோசனமொன்றையே கருதிப் பேராசையினால் தம்கையிலுள்ள சிறிதுபொருளையுமிழந்து மோசம்போகவேண்டும்? இப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்களென்றறிந்தல்லவோ சிலர் வஞ்சவேஷம்பூண்டு உலகத்தில் மோசஞ்செய்து வயறுவளர்த்துவருகிறார்கள். அது நிற்க.

இரஸவாதத்தில் நம்பிக்கையில்லாத சில ஆங்கிலேய தத்துவசாஸ்திரிகள் அடியில்வருமாறு அபிப்பிராயப்படுகிறார்கள்:—

“இரஸவாதத்தினால் ஸ்பரிசவேதியென்கிற ஒருபொருளைக்கண்டுபிடிக்கக்கூடுமென்றும், அதைக்கொண்டு தாழ்ந்தசகலஉலோகங்களையும் மாற்றுயர்ந்த பொன்னாக்கிவிடலாமென்றும் உலகத்தில் நெடுங்காலமாக ஒருநம்பிக்கையிருந்துவருகிறது. இந்நம்பிக்கையினாலே தீமைகள் சில விளையக்கூடியவைகளாயிருக்கினும், சில பெருத்தநன்மைகள் உண்டாகாமற்போகவில்லை. அவாவென்பதொன்றே மானிடருடைய சகல முயற்சிகளுக்கும் முக்கியகாரணம். ஸ்பரிசவேதியென்னும் அற்புதமானபொருளைக்கண்டறியவேண்டுமென்னும் அவாவினாலே அனேகர் வேண்டியமட்டில் பொருள்விரயஞ்செய்து மெய்வருத்தம் பாராமல்அயர்விலாஊக்கத்துடன் அனேகம் பொருள்களைச்சுட்டுச்சுட்டுக்கருக்கிக்கருக்கிப் பார்த்துவரும்போது அனேக பூதபௌதிகப் பொருள்களின் குணவிசித்திரங்களெல்லாம் அவர்களுக்கு விளங்குகின்றன. இதனால் அவர்கள் இரஸாயனசாஸ்திரத்தில் மிகவும் பாண்டித்தியமடைகிறார்கள். இவ்வாறு ஸ்பரிசவேதியைக்கண்டுபிடிக்க வேண்டுமென்னுமாசையொன்றுமாத்திரம் அவர்களுக்கிராவிடில் வீணேபொருளைச்செலவிட்டு அனேகபதார்த்தங்களின் குணாகுணங்களை ஏன் அவர்கள் அறிந்துகொள்ளப்போகிறார்கள்?”

இந்த அபிப்பிராயத்தைப்பரியாலோசித்துப்பார்க்கையில், “வாதங்கெட்டால் வைத்தியம்.” என்னும் பழமொழியின் தத்வார்த்தம்நமக்கு நன்றாய்ப் புலப்படுகின்றது. இரஸவாதம்செய்வோரெல்லாம் அது தமக்குப்பலிக்காமற்போகும்போது வைத்தியத்திற் சிறந்தவர்களாகிறார்கள். ஏனெனில், இரஸம் - பாஷாணம்- அனேக மூலிகைகள்-பஸ்பங்கள் ஆகியஇவற்றின்குணவிசேஷங்களை அவர்கள் கண்டறிந்துகொள்ளுகிறார்கள். அடுத்துமேலே நாம் உதகரித்துக்காட்டிய அபிப்பிராயத்தினால் அடியில்வரும் சிறு விருத்தாந்தமொன்று எமக்குஞாபகத்திற்கு வருகின்றது, அதாவது:—

ஒருகுடியானவன் நூறுகாணி நிலங்களை வைத்துக்கொண்டு விவசாயஜீவனஞ் செய்துவருகையில் அவனுடைய நான்குகுமாரர்களும் சோம்பர்களாய் விவசாயத்தில்முற்றும் சிரத்தையற்றவர்களாகத்திரிந்து வீண்காலம்போக்கிக்கொண்டுவந்தார்கள். அக்குடியானவன் வியாதியாயிருந்து மரணமடையுஞ்சமயத்திலே அவனுடையநான்குகுமாரர்களும் அவனிடத்திற்சென்று, பிதாவே! நீ உன்னுடைய ஆஸ்தியையெல்லாம் எங்களுக்கு இப்போதே பங்கிட்டுக்கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அதைக்கேட்ட அப்பிதா-இந்தசோம்பர்களுக்கு எவ்வளவு ஆஸ்திவைத்தபோதிலும் அது எவ்வளவும் பயன்படாது, இவர்கள் மாத்திரம் முதல்தரமான நம்முடைய நூறுகாணி நிலத்தைக நன்றாய் உழுது விதைவிதைத்துப் பயிர்செய்வார்களாகில் அதனால் அவர்கள் பெருத்தநன்மைகளை அடைவார்களென்றெண்ணித் தன்னிடத்திலிருந்த சில பொருளை ஒருதேவாலயத்தின் உபயோகத்திற்காகவென்று இரகசியமாய் மரணசாஸனமெழுதிவைத்துவிட்டுத் தன் நான்குகுமாரர்களையும் அழைத்து, மைந்தரே! நான் உங்களுக்குவேண்டியவரையில் திரண்ட ஆஸ்திசேர்த்துச் சோரர்முதலியோர்க்கஞ்சி நம்முடைய வீட்டிற்குப்பின்னேயிருக்கும் நூறுகாணி நிலத்தில் இங்குமங்குமாக மிகவும் ஆழமாய் அப்போதைக்கப்போது புதைத்துவைத்திருக்கிறேன்; ஆனால் இப்போது எனக்கு வயோதிகத்தினாலும் சித்தப்பிரமையினாலும் அந்தஇடங்கள் ஞாபகத்திற்கு வரவில்லை, நீங்கள் நான்மரித்தபின்னர் அவகாசமாய் அந்தநூறுகாணி நிலத்தையும் நன்றாய் ஆழமாகத்தோண்டிப்பார்த்து என்னுடைய ஆர்ஜ்ஜிதத்தையெடுத்துச் சுகமாய் வாழக்கடவீர்களென்று வாழ்த்தி உயிர்துறந்தான். அவன் இறந்தபிறகு அக்குமாரர்கள் நால்வரும் அம்மொழியைமெய்யென்றெண்ணித் தங்களுடைய நூறுகாணிநிலத்தையும் ஆழமாகவெட்டிச்சோதித்துப்பார்த்தும் பொருளொன்றுங் கிடையாமையால் கிலேசமுற்றார்கள். அப்போது விதைவிதைக்குங் காலமானபடியால் வீட்டில்அவர்களுடைய பிதா வைத்துப்போனவிதைகளை வேலைக்காரர்கள் தேகவியோகமான எஜமானன் தங்களுக்கு முன்னே கட்டளையிட்டிருந்தவாறு அந்நிலத்தில் விதைத்துவிட்டார்கள். பிறகு அவ்வருஷம் பயிர்மிகவும் நன்றாய்ச்செழித்தோங்கி அக்குமாரர்களுக்கு ஏராளமாகப்பொருளைத்தந்தது. அப்போது தங்கள்பிதா கூறிப்போன தந்திரமானமொழியின் தாற்பரியத்தையறிந்து அவர்கள் அன்றுமுதல்சோம்பலைவிட்டு விவசாயத்திற் சிரத்தைபாராட்டிச் சுகமடைந்தார்கள்.

அதுபோல் கீழ்ப்பட்ட சகல உலோகங்களையும் மாற்றுயர்ந்த பொன்னாக்கத்தக்க ஸ்பரிசவேதியென்னும் பொருளுண்டென்று ஆசைகாட்டுவதெல்லாம் பற்பல பதார்த்தங்களின் குணாகுணங்களையறிந்து ஜனங்கள் இரஸாயனசாஸ்திரத்தில் அபிவிர்த்தியடையவேண்டு

மென்னுங் கருத்தைக்கொண்டேயாமென்று சில ஆங்கிலேய சாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். அது நிற்க.

இரஸவாதவித்தை மெய்யென்றுகூறுவோர்-அது சுயப்பிரயோசனமற்றுப் பரோபகாரசிந்தையுள்ளவர்களுக்கே பலிக்குமென்று கூறுகிறபடியாலும், அதைப்பொய்யென்று கூறுவோர்-அதனால் வைத்தியமுறைகளைக்கற்பதற்கும்இரஸாயனசாஸ்திரத்திற்பயின்று பதார்த்தங்களின் குணாகுணங்களைக்கண்டறிவதற்குமிடமிருக்கிறதென்று கூறுகிறபடியாலும்,இரஸவாதவித்தையைமுற்றும்பொய்யென்றாவது அதனால் தீமைகளே விளைகின்றனவென்றாவது யாம் கூறவாவில்லை. அங்ஙனங்கூறுவதற்கிடமுமில்லை. அன்றியும், பூர்வீக ஆரியர்களுடைய சித்தாந்தப்படி அது அறுபத்துநான்கு கலைஞானங்களுக்குள்ளே ஒன்றாகச்சேர்க்கப்பட்டிருக்கிறது. அக்கலைஞானங்களுக்குள்ளே ஆகாயகமனம் (ஒருவருக்குந்தெரியாமல்ஆகாயத்திற் சஞ்சரிப்பது), அக்கினிஸ்தம்பனம் (தீசுடாதபடி காத்துக்கொள்வது), ஜலஸ்தம்பனம் (ஜலத்தின்மேல் நடப்பது), கட்கஸ்தம்பனம் (பகைவனுடையவாளையெழாதபடிசெய்வது), வாக்குஸ்தம்பனம் (பகைவனுடைய நா எழாமற் செய்வது) முதலிய ஞானங்கள் இப்போது சாஸ்திரிகளுக்குத் தெரியாதகாரணத்தினாலேயே அவைகளைப்பொய்யென்று கூறுவது எப்படி அதருமமாகுமோ அப்படியே இரஸவாதவித்தை இப்போது பெரும்பான்மையோர்க்குத் தெரியாத காரணத்தினாலேயே அதை முற்றும் பொய்யென்று சாதிப்பது அதருமமாகும். ஆனால் அதனுணர்ச்சி சிறிதுமிராத அவிவேகிகள் எல்லாம் தெரிந்தவர்களைப்போல் நடித்து ஜனங்களை வஞ்சித்துத்திரிந்து ஜீவிக்கிறார்களாகையால் அவர்களாலே வீணே மதிமோசம் போகாதபடி நம்மனோர்க்கு எச்சரிக்கை பண்ணுகிறோம்.

ஒருவனுடைய நட்சத்திரங்கள்,கிரகங்கள் முதலியவற்றின் இயக்கத்தினாலே அவனுடைய சுகதுக்கங்களை யறிந்துகூறுவதே ஜோதிடமாகும். இதுவும் இந்துக்களுடைய சித்தாந்தப்படி அறுபத்துநான்குகலைஞானங்களிலொன்றுதான். இந்த சாஸ்திரத்திற் பாண்டித்தியமடைந்தவர்களைப்போல நடிக்குஞ் சிலர் சிலபிரபுக்களுடைய விர்த்தாந்தங்களை அக்கம்பக்கங்களில் விசாரித்துக்கொண்டு பிறகு அவர்களிடத்திற்சென்று அதுவரையில் அவர்களுக்குண்டான சுக துக்கங்களைக் கூறி அவர்களைப்பிரமிக்கச்செய்கிறார்கள். இனி எதிர்காலத்து நடக்கப்போகிறதாகச்சொல்லப்படும் சுகதுக்கங்களையும் அவர்கள் நம்பிவிடுகிறார்கள்.

"வருந்தியழைத்தாலும் வாராதவாரா
பொருந்துவன போமினென்றாற் போகா—இருந்தேங்கி
நெஞ்சம்புண்ணாக நெடுந்தூரந்தானினைந்து
துஞ்சுவதே மாந்தர்தொழில்."

என்னும் மூதறிஞர் கருத்தை அவர்கள் அறிகின்றிலர்போலும்! சென்றகாலத்தில் அநுபவித்துமுடிந்த சுகதுக்கங்களைத்தெரிந்துகொள்

வதனாற் பயனில்லை. நிகழ்காலத்தில் அவைகளை வினைவழி ஈஸ்வரன் கொடுத்துக்கொண்டுதான்வருகின்றனர். இனி எதிர்காலத்தும் அப்படியே அவர்தருவார். இனிமேல் வரப்போகுந்துயரத்தை இப்போதே தெரிந்துகொள்வதனால் அப்போது அடையப்போகுந் துக்கத்தையடையஇப்போதே நாம்தொடங்கிவிடுகிறோம். இனிமேல் விளையப்போகுஞ்சுகத்தை இப்போதேதெரிந்துகொள்வோமானால் "சுகம் எப்படியும் நமக்குவரத்தானேபோகிறது." என்று முயற்சியின்றி காலத்தைவீணிற்கழிக்கநேரிடும். ஆகையால் ஜோதிடத்தில் நாம் வீணேமனதைச்செலுத்திக் காலம்போக்குவதிற் பயனேதாவதிருப்பதாக எமக்குத் தோன்றவில்லை.

இத்தியாதி அபிப்பிராயக்குறிப்புகளையும் நியாயங்களையும் யோசித்து, இரஸவாதத்திலேனும் ஜோதிடத்திலேனும் நிபுணர்களென நடித்து வெளிவருபவர்களால் நம்மனோர் மதி மோசம்போகாதபடி ஜகதீசர்காப்பாராக.

## விவிதவிஷயவிளக்கவினாவிடை.

(தொடர்ச்சி.)

59. சீடன்.—யானையினுடைய அவயவங்களைப்பற்றியும், அப்பியாசங்களைப்பற்றியும், குணகுணங்களைப்பற்றியும் சிலவினாக்கள் கேட்டுத்தெளிய அவாவுடையேன். யானைக்கு மற்றெல்லா அவயவங்களைக்காட்டிலும்துதிக்கை மிகவும் உபயோககரமானதாயிருப்பதாகத்தோன்றுகிறது. மற்றமிருகங்களுக்குத் துதிக்கையென்னும் அவயவத்தையமைக்காமல் யானைக்குமாத்திரம் கடவுள் ஏன் அமைத்தனர்?

ஆசிரியர்.—புல் பூண்டு தழை முதலியவற்றைப் புசிக்கும் ஏனைய பிராணிகளுக்குக் கழுத்துநீண்டு அதன்முனையில் தலையமைந்திருக்கிறது. யானைக்குத்தலைமிகவும் பருத்தும் தந்தங்கள் கனத்துமிருக்கிறபடியால் அவ்வளவு பெரும்பாரத்தைத்தூக்கவும் இறக்கவுங்கூடியதாயிருப்பதற்குக் கழுத்து பிரமாண்டமானதாய்க் கடினமான அனேக எலும்புகளாலும் நரம்புகளாலும் அமைக்கப்பட்டிருக்கவேண்டியதாகும். அது அவ்வளவும் அனுவசியம். ஈஸ்வரசிருஷ்டியில் அனுவசியமாய் எந்தப்பிராணிக்கும் எவ்விதவுறுப்பும் அமைவதில்லையாதலின், ஏனையபிராணிகளுக்குள்ள நீண்டகழுத்திற்குப்பர்த்தியாக யானைக்குத்துதிக்கை யமைக்கப்பட்டிருக்கிறது.

60. சீ.—யானைத்துதிக்கையின் இலட்சணத்தைப்பற்றி எனக்கு விரிவாக எல்லாவிவரங்களையும் தாங்கள்கூறவேண்டும்.

ஆ.—ஈஸ்வரசிருஷ்டியிலுள்ள விசித்திரமான பொருள்களுக்குள்ளே யானையின் துதிக்கையை மிகச்சிறந்ததாகக்கூறலாம். யானையின் து

திக்கையொன்றில்மாத்திரம்நாலாயிரம் நரம்புகளுக்குக்குறையாமலிருக்கின்றன. வயதுவந்தபலசாலியான மனிதனுடையதேகத்தில் பாதாதிகேசம்வரையிலுள்ளநரம்புகளெல்லாம் மேற்கண்டதொகைக்குக் குறைந்தவைகளேயாம். இந்தநரம்புகளுட் சில துதிக்கைமுழுவதும் நீளமாகவும், சிலதுதிக்கையில் குறுக்காகவும், சிலவளையங்களாகவும், சில சாய்ப்பாகவும் மஹாவிசித்திரமாயமைந்திருக்கின்றன. இவ்வமைதியினால் யானையானது தன் துதிக்கையைத் தன்இஷ்டப்படியெல்லாம் நாற்புறமும் திருப்பக்கூடியதாயிருக்கிறது. இவ்வொரு கருவியே அதற்கு உஸ்வாச நிஸ்வாசஞ் செய்வதற்கும், ஆகாரத்தை உட்கொள்வதற்கும் உபயோகப்படுகிறது. சாதாரணமாய் அக்கருவி எட்டடிநீளமிருக்கிறது. யானைக்கு மற்றெல்லாப்பாகங்களைவிடத் துதிக்கையினிடமாக ஸ்பரிசவுணர்ச்சி மிகவும் விசேஷம். இக்கருவி ஒன்றைக்கொண்டே அந்தப்பிராணி மிகவும்பாரமான வஸ்துக்களைச்சுலபமாய்த்தூக்கும்; அதிகநுண்ணியபொருளையும் நிலத்திலிருந்துபொறுக்கும்; தன்னுடைய செவி முதலிய ஏனைய உறுப்புக்களில் ஈ கொசு முதலியவை மொய்க்காவண்ணம் ஓட்டிக்கொள்ளும்.

61: கே.—தந்தங்கள்யானைக்கு எவ்வாறு பிரயோகப்படுகின்றன?

ஆ.—யானையின்தந்தங்கள் அதன்கவுளினிடமாகவுள்ள பருத்ததிப்பைபோன்ற ஒரு பெருந்தக்கத்திற்பூட்டப்பட்டிருக்கின்றன. ஆகாரங்களை மெல்லுவது முதலியவற்றிற்கு இத்தந்தங்கள் பிரயோகப்படுவதாகத்தோன்றவில்லை. பகைவர்களை எதிர்ப்பதற்காகவும், தற்காப்புக்கருவிகளாகவும் அவை அமைக்கப்பட்டிருப்பனவாகத் தெரியவருகிறது. செடிகளடர்ந்தகாட்டுக்குள் யானை பிரவேசிக்கும்போது அது தன் தந்தங்களைக்கொண்டுதான் சிறுமரங்களையும் கிளைகளையும் முறித்து வழி செய்துகொண்டுபோகிறது. இத்தந்தங்களிராவிடில் அதன் துதிக்கைக்கும் முகத்துக்கும் அடிக்கடி அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலே காயம்படும். மேலும் மஹாதந்திரசாலியான புலி உக்கிரரூபமான காண்டாமிருகம் ஆகிய இப்பிராணிகளோடு யானை சண்டைசெய்ய நேரிடும்போது அதற்குத்துதிக்கை அவ்வளவாக உபயோகப்படுவதில்லை; அத்தருணத்திலே அது தன்தந்தங்களைக்கொண்டு அப்பிராணிகளைச் சின்னபின்னமாகக்கிழித்து நிலத்தில் அழுத்திக்கொன்றுவிடுகின்றது.

62. கே.—யானையின் உருவத்தின் அளவைநோக்க அதற்குக்கண்கள் ஏன் மிகவும் சிறுத்திருக்கவேண்டும் ?

ஆ.—அதற்குக் கண்சிறுத்திருப்பதினாலேயே பார்வைகுறைந்திருப்பதாக நாம் எண்ணக்கூடாது. அது எப்போதும் காடுகளில்சஞ்சரிக்கிறபடியால் நாற்புறமுமுள்ள மரங்களின்கிளைகளை ஒடிக்கும்போதும் பெயர்க்கும்போதும் அதன்கண்களுக்கு ஊனம்நேரிடாதபடி அவை அவ்வளவுசிறிதாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் யா

ளை மரங்களை ஒடிக்கும்போது அவைகளில் உயிர்வாழும் பலவகையான ஈக்கள் முதலியவை அதன் கண்ணைப்புண்படுத்தாவகைக்கு அதன் நேத்திரம் குழிந்து ஆழ்ந்து சிறுத்திருக்கும்படி அமைக்கப்பட்டிருக்கிறது. அதன்கண்ணுக்கு ஓர்வகை விசித்திரமான இமை அமைக்கப்பட்டிருக்கிறது. அதைக்கொண்டு அந்தப்பிராணி தன் கண்ணில் அகஸ்மாத்தாய்விழும் தும்பு-தூசு-சிறுதுரும்பு முதலியவற்றைப் போக்கிக்கொள்ளுகிறது. ஆனால் நமக்குள்ள இமைக்கும் அதற்குள்ளஇமைக்கும் வித்தியாசமென்னவென்றால், நாம் இமையைக்கொண்டு நன்றாய்க்கண்ணைமூடினால்தான் கண்ணில் எதுவும் விழாவண்ணம் காத்துக்கொள்ளலாம், அதுவோ தன் இமையைக்கொண்டு கண்ணைமூடாமலே கண்ணில் எதுவும் விழாமல் அதைப்பாதுகாத்துக்கொள்ளக்கூடியதாயிருக்கிறது. இவ்விஷயத்திலே யானைக்கும் பட்சிகளுக்கும் ஒரே மாதிரியான இமையிருக்கிறதென்று கூறலாம்.

63. கே.—யானைக்குச்செவிகள் ஏன் அவ்வளவுபெரிதாயிருக்கவேண்டும்?

ஆ.—வெளிப்புறத்திலுள்ள சப்தத்தை உள்ளே கொண்டுபோவதற்கு ஏற்றவாறு (எனவே,நிச்சலவாயுவினியக்கத்தை ஒருவழிப்படுத்தி மையஸ்தானத்திற்குக்கொண்டுவந்து ஓசையைஉட்செலுத்துவதற்கேற்றவாறு) ஒவ்வொருபிராணிக்கும் செவியின் வெளிப்புறம் அமைக்கப்பட்டிருக்கிறதென்பதைச் செவிலட்சண சாஸ்திரத்தால் நாமறியலாம். யானை எக்காலத்தும் காடுகளிலேசஞ்சரித்துக்கொண்டு விருட்சங்களுக்கிடையிலே வசிக்கவேண்டிய பிராணியாகையால் அவ்விருட்சங்களின் இலைகள் கிளைகள் முதலியவற்றின் இயக்கத்தினாலே தூரத்திலிருக்கும் ஓசை அதன்செவிக்குட் பிரவேசிப்பதற்கு அடிக்கடி தடைநேரிடும். இத்தடையைப்போக்குவதற்கேற்றதாய் அதன்செவி அகன்று விசாலமாயிருக்குமாறு அமைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு செவி அகன்று விசாலமாயிருக்கிறபடியால் சமீபத்தில் சிலசப்தங்களினாலே தடைநேரிட்டபோதினும் நெடுந்தூரத்திலுள்ள ஓசை நன்றாய்க்கேட்கும். அதன் செவி இவ்வாறிராமல் சிறிதாயிருக்குமாயின் இவ்வநுகூலம் அதற்குண்டாகமாட்டாது.

64 கே.—யானை புலியினுருவத்தைக்கண்டமாத்திரத்தில் தன்துதிக்கையை ஏன் தூக்கிக்கொள்ளுகிறது?

ஆ.—மற்றெல்லாஉறுப்புக்களைவிட யானை தன்துதிக்கையை மிகவும் ஜாக்கிரதையாய்க்காப்பாற்றுகிறது. ஏனெனில்,அதன் துதிக்கைக்கு ஏதேனும் ஆபத்துவிளையுமானால் பிறகு அது பிழைப்பதே துர்லபம். மஹாதந்திரசாலியான புலி யானையை எதிர்ப்பதானால் அதற்குத் தெரியாதபடி ஏதேனும் புதரண்டை ஒளித்திருந்து திடீரென்றுபாய்ந்து அதன் துதிக்கையைத் தன் நகங்களாலும் பற்களாலும் கடித்துவிடுவதுவழக்கம். ஆகையால்,தூரத்திலெங்கேயாவது புலி இருக்கிறதாக

யானை அநுமானித்தவுடனே, புலி தன் துதிக்கையின்மேற் பாயாவகைக்கு அதைமேலே நன்றாய்த்தூக்கிப்பிடித்துக்கொள்ளுகிறது. அது தன் துதிக்கையைமாத்திரம் காப்பாற்றிக்கொள்ளுமானால் பிறகு தன் தந்தங்களாலும் கால்களாலும் புலியைத்துவைத்துச் சின்னபின்னப்படுத்திக்கொன்றுவிடும். இறந்துபோன புலியின்தோலை அதற்குக்காட்டினாலும் அது உடனே தன் துதிக்கையை மேலேதூக்கிக்கொள்ளும். புலியினிடத்தில் யானைக்கு அவ்வளவுபயம்.

65. சீ.—இதுவரையில் யானையின் அவயவவிசித்திரங்களைப்பற்றித்தாங்கள்கூறிக்கொண்டுவந்த விஷயங்களை யான் நன்குணர்ந்தேன். இனி அதன் குணாகுணங்களை அறியவிரும்புகிறேன்.

ஆ.—நன்றாய்ப்பழகினயானை மற்றெல்லாப்பிராணிகளைவிட மிகவும் நன்றியறிதலாகவும் அடக்கமுடையதாகவும் சாந்தமுடையதாகவுமிருக்கிறது. பிறருக்கு ஆபத்துநேரிடும்போது தன்னாலியன்ற உதவியைச்செய்ய அது ஒருபோதும் பின்னிடுவதில்லை. அது தன்பாகனுடைய அபிப்பிராயங்களையெல்லாம் அதிக நன்றாயறிந்துகொள்ளுகிறது. கோபம்-சந்தோஷம்-துக்கம் முதலியவற்றின் குறிகளையெல்லாம் அதிசீக்கிரத்தில் அது தெரிந்துகொள்ளுகிறது. தன்னிடத்தில் எதார்த்தத்திலே விசுவாசம் பாராட்டுகிறவன் எவனாயிருந்தாலுஞ் சரி, அவனிடத்திலே அது அதிக பிரீதிபாராட்டி அவனுடைய ஏவற்பணிவிடைகளைச்செய்துவருகின்றது. அது ஒருதீங்கும்செய்யாமலிருக்க அதற்குவிளையாட்டுத்தனமாகவேனும் எவ்வித தீங்கையாவது ஒருவன் விளைக்கத்தலைப்படுவானாகில் அது உடனே அவனிடத்துக் குரோதம்பாராட்டிப் பழிவாங்கப்பின்னிடுவதில்லை. ஆனால் விளையாட்டுத்தனமாகத் தனக்கு ஒருவன் தீங்குசெய்தால் தானும்விளையாட்டுத்தனமாகவே அவனுக்குத்தீங்குவிளைக்கும். அப்படிக்கன்றி எதார்த்தத்தில் ஒருவன் தீங்குவிளைப்பானாகில் தானும் அவனுக்கு எதார்த்தத்தில் தீங்குவிளைக்கும். ஆகையால், மனிதர்களுடைய உள்ளக்கருத்தைத்தெரிந்துகொள்வதில் எல்லாப்பிராணிகளைவிட யானையே மிகச்சிறந்தது. மேற்கண்ட குணவிசேஷங்கள் யானைக்கமைந்திருக்கின்றனவென்பதைக்குறித்து வாஸ்தவத்தில் அந்தந்தக்காலங்களில் நடந்தேறிய விர்த்தாந்தங்கள் சிலவற்றைக்கூறுவேன், கேட்பாயாக.

1. சௌபா என்னும் பிரதேசத்தின் இராஜதானியாகிய லக்னூர் என்னும் பட்டணத்தில் மஹம்மதியருடைய அதிபதியாகிய நபாப் ஒருவர் அரசாண்டுவந்த காலத்திலே ஒருவகையான கொள்ளைநோயுண்டாய் அனேக பிரஜைகள் திரள் திரளாகத்தினம் மாண்டுவந்தார்கள். அந்தப்படியிருக்கையில் ஒருநாள் அந்த நபாப் தன் பட்டத்து யானையின்மீதேறி அப்பட்டணத்தைச் சுற்றிக்கொண்டுவந்து தன் அரண்மனைக்குப் போவதற்காகத்திரும்புகையில் அனேக குடிகள் அக்கொள்ளைநோய்க்கு ஆற்றாதவர்களாகி ஏதேனும் சிகிச்சையாவது வேறே பரிகாரமாவது பெறுவதற்காக நபாப்பைக்கண்டு முறையிட்டுக்கொள்ளும்பொருட்டு அவ்வரண்மனைக்குப் போகும்பாதையில் படுத்துக்கொண்டிருந்

தார்கள். தன் குடிகளின் உயிரைத்தன் இன்னுயிர்போல் பாவிக்காத அந்த நபாப் அங்கிருந்த பிரஜைகளை அலட்சியமாகப்பாவித்து அதிவிரைவாய்த்தன் அரண்மனைக்குப் போக எண்ணித் தன்னுடைய யானையைச் செலுத்துகையில் அது மெய்மறந்து அங்குபடுத்துக்கொண்டிருந்த அனேகரைத் தன் துதிக்கையினால் தூக்கிப்பாதையின் இருபுறத்திலும் நோவாமல் கிடத்திக் கொண்டும், சிலரைத்தாண்டிக் கொண்டும், தன்னைக்கண்டு எழத்தொடங்கினவர்களை மெல்லத்துரத்திக்கொண்டும், அங்கிருந்த ஒருவருக்கும் அணுவளவேனும் தீங்குசெய்யாமலே அரண்மனைக்குச்சென்றது. இவ்வாறு அதைச்செய்யும்படி பிரேரேபித்தவர்ஒருவருமிலர். அதன்பெருந்தன்மையானகுணமே அதன்செய்கைக்குக்காரணம். இப்போதும் உற்சவகாலங்களில் கொண்டுவரப்படுகிற சிலயானைகள் வீதிகளிற்செல்லும்போது தன்னைவியப்புடன் பார்த்து அதிசமீபத்தில் நின்றுகொண்டிருக்கும் சிறுவர்களுக்கு ஹானிநேரிடாதபடி அவர்களைவிலகியிருக்கச் செய்யும்பொருட்டு இலைகளையும் தழைகளையும் சிறுகொம்புகளையும் இருபுறத்திலும் வீசிக்கொண்டேபோவதை நாம் பிரத்தியட்சமாகக் காணலாம்.

2. ப்ரென்சுக்காரருக்கும் இங்க்லீஷ்காரருக்கும் 1759-ம்வருஷத்தில் (East Indies) ஈஸ்ட் இண்டீஸ் என்னும் பிரதேசங்களில் நடந்தேறிய ஒரு யுத்தத்தில் பீரங்கிவண்டிக்குப் பூட்டியிருந்த யானை ஒன்றின்மேல் ஓர் குண்டுதாக்கி அதற்கு நன்றாய்க்காயம்பட்டது. உடனே சில இராணுவ உத்தியோகஸ்தர்கள் அடுத்த வைத்தியசாலையிலிருந்த இரணவைத்தியரிடத்தில் அதை இட்டுக்கொண்டுபோய்ச் செய்யவேண்டிய அவசியமான சிகிச்சை மாத்திரம் செய்வித்தார்கள். பிறகு அந்தயானை தினந்தோறும் ஒருவருடைய பிரேரேபணையுமின்றி அவ்வைத்தியசாலைக்குப் பிணியாளிகள் போகவேண்டிய காலம் பார்த்துச்சென்று தன் வரவைப்பற்றி அறிக்கைபண்ணியும், அதைக்கண்டமாத்திரத்தில் இரணவைத்தியர் காரசீலை முதலிய உபகரணங்களைக்கொண்டுவந்து அதற்குச் சிகிச்சைசெய்ய நின்றபோது அது கீழே நிலத்தில் நன்றாய்ப் படுத்துக்கொண்டு வைத்தியர் சமீபத்தில்வந்து செய்யவேண்டிய காரியங்களையெல்லாம் செய்வதற்கு அநுகூலமாகத் தன்னுடையஅவயவங்களைத்திருப்பிக்காட்டியும், அவர் சிகிச்சைசெய்து வந்தபோது அதற்கு நோய்மிகவும் அதிகமாயிருக்குமானால் துதிக்கையை மேலே தூக்கிக்கொண்டு தன் துயரத்தைக்காட்டுவதற்கான அழுகுரலோசை செய்தும் வந்தது. இவ்வாறு தனக்குச் சிகிச்சைசெய்து தன்னைக் குணப்படுத்திய வைத்தியர் விஷயத்தில் அது பாராட்டிய நன்றியறிதலின் சின்னங்கள் நேரில் கண்டவர்களுக்குத்தான் நன்றாய்த்தெரியும்.

3. யானைகள் நிறைந்த ஒருகாட்டில் வேட்டையாடிக்கொண்டிருந்த ஒருவர் சொல்வதாவது;—ஒருஆண்யானையின் இடதுபுறத்து முன்னங்காலிற்குண்டுபட்டு ஊடுருவிச்சென்ற மாத்திரத்தில் அது நடக்கச் சக்தியற்றுத் துக்கத்தோடு கர்ஜ்ஜனை யிட்டுக்கொண்டிருக்கையிலே அடுத்த ஒருபுதரில் பதுங்கிக்கொண்டிருந்த பெண் யானையொன்று தனக்கும் ஆபத்து நேரிடுமே யென்பதைச் சற்றும் யோசியாமல் திடீரென்று வெளியில் வந்து அந்த ஆண்யானையைப் பன்முறையும் சுற்றிச்சுற்றித் தன் துதிக்கையினால் தடவிக்கொடுத்துச் சிறிதுதூரம் தன்பகைவர்களைத் துரத்துவதற்காக ஓடிவந்தது. இவ்வாறு ஓடிவந்தபெண்யானை தனியேயிருக்கும் ஆண்யானைக்குஇடையில் ஏதேனும் இடையூறு நேரிடப்போகிறதென்றெண்ணித் திபதிபவென்று அதனிடத்திற்கே மறுபடியுமோடியது. அப்போது அந்த ஆண்யானை காட்டிற்குள்ளே க்ஷேமமாய் ஓரிடத்திற் படுத்துறங்குவதற்காக நடக்க முயன்றபோது குண்டினால்

ஊனப்பட்டிருந்த அதன்கால் தரையில் பாவாதபடியினால் அப்பெண்யானை அக்காலுக்குப்பதிலாக இறங்கித் தன் தேகத்தைத் தாங்கக் கொடுத்துக்கொண்டே சிறிதுதூரம் சென்றது. இவ்வாறு அரைமணிநேரம் வரையில் அவ்விரண்டு யானைகளும் போய்க்கொண்டேயிருக்கையில் வேறொரு குண்டுவந்து அப்பெண்யானையைப் பலமாய்த் தாக்கியபடியால் அது பிரவாகம்போல் உதிரம் கக்கியிறந்தது. ஆதரவற்று ஓடமுடியாமலிருந்த ஆண்யானையின்மேல் மற்றொரு பெருங்குண்டுவந்து வீழ்தலும் அதுவும் உயிர்துறந்தது. அப்பெண்யானை தன் உயிரை ஒருபொருளெனமதியாமல் ஆதரவற்ற மற்றொரு யானைக்குச் சகாயமாகவந்த விஷயம் வியக்கத்தக்கதே!

4. (Carel Krieger) கேரல்க்ரீகர் என்னும் ஒருவன்யானை வேட்டையில் மஹாசமர்த்தன். அவன் அடியிற்கண்டவாறு மரணமடைந்தனன்:—அவன் மஹாதைரியசாலியாகவும், யானைகளைக்குறிபார்த்துச் சுடுவதில் மஹாசமர்த்தனாகவுமிருந்தபடியால் யானைகளுக்கு எவ்வளவும் அஞ்சாமல் அடவிகளுக்குட்சென்று அவைகளோடுபோர்செய்துவந்தான். ஒருநாள் அவன் தன் துணைவர்களோடு வேட்டையாடிக்கொண்டேபோகையில் ஒரு யானையை நன்றாய்க்காயப்படுத்திவிட்டான். அம்மட்டில் சும்மா இராமல் அதைப் பின்னுந்துரத்திக்கொண்டே அவன்போனபோது அதுதிடீரென்று திரும்பி ஓடிவந்து அக்கூட்டத்தாருக்குள் தன்னைக்காயப்படுத்தினவன் இவனென்று சரியாய்க்கண்டுபிடித்துத் தன் துதிக்கையினால் இழுத்துமேலே தூக்கியபோது அவனுடைய துணைவர்கள் அவனுக்கு இனி என்ன ஆபத்துநேரிடுமோ என்றஞ்சித் தங்கள்வரையில் தப்பிப்பிழைப்பதற்காக ஓடிப்போய் விட்டார்கள். அவ்வாறு ஓடியவர்கள் மறுநாள் அவ்விடத்திற்குவந்துபார்க்கையில், அந்தயானை அவனைக்கீழே அறைந்துகாலினால் நையத்துவைத்து, அவனுடைய பிராணன்போயும் அவன்தேகத்தைச் சும்மாவிட்டுப்போக அதற்கு விருப்பமில்லாமல் அவனுடைய சதை நரம்பு எலும்பு முதலியயாவற்றையும் பொடிப்பொடியாகச் செய்துவிட்டதாய்த் தெரியவந்தது; அதன் குரோதம் அம்மம்ம மிகப்பெரிது !

5. இலங்கைத்தீவில் துரைத்தனத்தார் யானைகளைக்கொண்டே அநேக வேலைகளைச்செய்து வருகிறார்கள். சில வருஷங்களுக்குமுன்னே அத்தீவில் ஓரிடத்திலே குன்றுகளின்மேலும் காடுகள்மூலமாகவும் ஜலசர்ப்பராவுக்காகத் தண்ணீர்க்குழாய்களை அமைக்கவேண்டியதாய் நேரிட்டபோது என்ஜினீர் என்னும் உத்தியோகஸ்தர் யானைகளைக்கொண்டு அக்குழாய்களை ஒன்றோடொன்று பொருத்திவைப்பித்துவந்தனர். அப்போது ஒருயானை ஒருகுழாயை மற்றொருகுழாய்க்குள் நுழைத்துத்தன் துதிக்கையினாற் பொருத்தமுடியாதபோது அதுதன்னுடைய சொந்தவேலையைப்போற்கருதிக் கீழே இறங்கி அக்குழாய்கள் பொருந்தாமைக்குக் காரணத்தைக்கண்டுபிடித்துப் பிறகு அவைகளைப் பக்குவமாயமைத்துத் தன்தலையினால் முட்டி உள்ளேபோகும்படி செய்துதிரும்பியது. கூலிக்குவேலைசெய்யும் சில ஆள்களைப்போல் நமக்காவதென்னவென்று தன்வேலையில் அது எவ்வளவும் சிரத்தையற்றிருக்கவில்லை.

6. சில வருஷங்களுக்கு முன்னே நமது இந்தியாவில் ஒருபட்டணத்திலேயிருந்த ஓர்யானை கடைவீதிவழியாகத்தினம்போய்க்கொண்டிருந்தபோது அங்கு பழம்விற்றுக்கொண்டிருந்த கிழவியொருத்தி அதற்குத்தினம் ஒருபழம் கொடுத்துவருவது வழக்கம். இப்படியிருக்கையில் ஒருநாள் அந்தயானை மதமேவிட்டுக் கோபாவேசத்தினாற் கட்டுத்தறியை முறித்துக்கொண்டு அக்கடைவீதிவழியாய் ஓடிவருகையில் அங்கிருந்த எல்லோரும்பயந்து பண்டங்களைவைத்தபடி வைத்துவிட்டு ஓடிப்போய்விட்டார்கள். அக்கிழவியும்பயந்து ஓடிப்போ

ய்விட்டாள். ஆனால் அவள் அந்தப்படி ஓடிப்போகையில் தனக்குச் சமீபத்தில் தரையிலேஉட்கார்ந்துகொண்டிருந்ததன் சிறுகுழந்தையைத் தூக்கிக்கொண்டுபோக மறந்தாள். அந்தயானை கோபாவேசத்தோடு வரும்போது அப்பழக்கடையண்டை நின்று,தனக்கு நாடோறும்பழந்தந்துவரும் கிழவியின்குழந்தை அதுவென்றறிந்து அதைமெல்லத்துதிக்கையினால் தூக்கிப்பாதையின் ஒருபுறமாகவைத்துப்போய்விட்டது. அதன் நன்றியறிதல் சாலவியப்புடைத்தே!

7. இந்தியாதேசத்தில் டில்லி என்னும் பட்டணத்திலே ஒருதையற்காரன் தன்கடையின்பக்கமாக நாடோறும் போய்க்கொண்டிருந்தயானை ஒன்றுக்கு ஏதேனும் பழமுதலிய தின்பண்டங்கொடுத்துவந்தான். இப்படியிருக்கையில் ஒருநாள் அத்தையற்காரன் ஏதோமனவருத்தமாக உட்கார்ந்துகொண்டிருக்கும்போது வழக்கப்படி அந்தயானை அன்றையதினம் அவனுடைய அறையின்சாளரவழியாகத் தன் துதிக்கையை நீட்டியது. அவன் அதைக்கண்டமாத்திரத்தில் தான் துணிதைத்துக்கொண்டிருந்த ஊசியினால் அதன் துதிக்கையைக்குத்தி "போ,இன்றைக்கு ஒன்றுமில்லை." என்று முகஞ்சுளித்துக்கூறினான். அவ்வேழம் நீட்டியதுதிக்கையைவாங்கிக்கொண்டு தண்ணீர்குடிக்க நீர்த்துறைக்குச்சென்று வழக்கப்படி தண்ணீர்பருகியபின் சேற்றையும் அழுக்குத்தண்ணீரையும் ஒருவருக்குந்தெரியாமல் வாரிக்கொண்டு திரும்பிவந்துஅத்தையற்காரன் அறையின்சாளரத்துக்குள் தன் துதிக்கையைநுழைத்து அச்சேற்றையும் தண்ணீரையுங்கொண்டு அங்கிருந்தயாவரும்வியந்துநகைக்குமாறுஅத்தையற்காரனுக்கு அபிஷேகஞ்செய்துதன் குரோதத்தைத்தீர்த்துக்கொண்டது.

8. இந்தியாவிலே ஒருபாகன் தன்யானையைத் தன்வீட்டினின்றும் அப்போதைக்கப்போது அடுத்த ஒருபட்டணத்திற்குச் செலுத்திக்கொண்டுபோய் வேடிக்கைகாட்டி ஜீவனஞ்செய்துவருவது வழக்கம். ஆனால் அவன்வீட்டிற்கும் அப்பட்டணத்திற்கும் மத்தியிலிருந்த ஒரு அகழியை அவன் கடக்கவேண்டியதாயிருந்தபடியால் அவ்வகழிக்குக் குறுக்காகப்போட்டிருந்த பாலத்தின்மேல் அவன் அந்தயானையைச் செலுத்திக்கொண்டுபோவது வழக்கம். இப்படியிருக்கையில் ஒருநாள் அந்த வாராவதி ஊனமாயிருக்கிறதென்பதை அவ்வேழம் எப்படியோதெரிந்துகொண்டு அதன்மேல் போகமாட்டேனென்று நெடுநேரம்போராடியது. அதைத்தெரிந்துகொள்ளாத அம்மூடப்பாகன் தன் அங்குசத்தினாற்பலமுறையும் அப்பிராணியின் மத்தகத்தை மோதிமோதிஅடித்து அதை அப்பாலத்தின்மேற்செலுத்தினான். அவ்வாராவதி திடீரென்று இடிந்துவிழுந்தது. யானையும் பாகனும் அகழியில்விழுந்தார்கள். பாகன் இறந்தான். யானையோ சிறிதுகாயத்தோடு நீந்தித்தப்பிப்பிழைத்தது. தன்னுடையபெருத்த உருவத்தை இன்னதுதாங்கும் இன்னதுதாங்காதென்பதைக்குறிப்பாக அறிந்துகொள்ளுஞ்சக்தியை யானைக்கு ஈஸ்வரன் அளித்திருக்கின்றனர்.

9 இந்தியாவில் சிலவருடங்களுக்குமுன்னே அவ்வவ்விடத்திய அருமையானகாட்சிகளைப் படம்பிடிப்பதற்காக ஊரூராய் யாத்திரைசெய்த ஐரோப்பிய கனவானொருவர் பின்வருமாறு கூறுகிறார்.— "நான் யாத்திரைசெய்துவருவதற்காக அமர்த்திக்கொண்டயானை மஹாவிவேகி; நான் அதன்மேலிருந்துகொண்டே படம்பிடிக்கும்போதெல்லாம் அது அசைந்தால் படம்கெட்டுப்போகுமே என்றஞ்சி எவ்வளவும் தன் அவயவத்தை அசைக்காமல் பர்வதம்போல்நிற்கும். யான் படமெடுத்தானவுடனே குறிப்பினால் அறிந்துகொண்டு அது தன்துதிக்கையினாலே ஈ முதலியவற்றைப் பிறகு ஓட்டும். நான் யாத்திரைசெய்துகொண்டுபோகையில் அப்பாதையிலுள்ள விருட்சங்களின் கிளைகள் வழியை யடைத்துக்கொண்டிருக்குமானால் எனக்கு அவைகளால் ஏதே

னும் நீங்குநேரிடப்போகிறதென்று அவைகளை முன்ஜாக்கிரதையாய் ஒடித்து முறித்துக்கொண்டேபோகும். அப்படிப்பட்டயானை எனக்குக்கிடைத்திராவிடில் என்காரியஞ் சித்திபெற்றேயிராது.”

10. இந்தியாதேசத்தில் சிலவருடங்களுக்குமுன்னேஒருசேனை மலைமேல் ஏறிப்போகவேண்டியதாய் நேரிட்டபோது அச்சைன்யத்திற்கு உபகரணங்களாயிருந்த பெருத்த பீரங்கிகளை வண்டிகளின்மேலேற்றி யானைகளைக்கொண்டு தளகர்த்தர்கள் இழுப்பித்தார்கள். அனேகயானைகள் ஒன்றின்பின் ஒன்றாக அணியணியாய்ப் பீரங்கிவண்டிகளை இழுத்துக்கொண்டே மலைமேல் ஏறிப்போய்க்கொண்டிருக்கையில் அவ்வண்டிகளில் ஒன்றின்ஏர்க்காலின்மேல் உட்கார்ந்துகொண்டிருந்த இராணுவவீரனொருவன் தூக்கமயக்கத்தினால் தப்பிக்கீழே விழுந்துவிட்டான். அதற்கடுத்துப் பின்வந்துகொண்டிருந்த வண்டிக்குப்பூட்டிய யானை அவன் அவ்வாறு வீழ்ந்துவிட்டதைக்கண்டமாத்திரத்தில் அவனைத்தூக்குவதற்காகத் தன் துதிக்கையைநீட்டியும், அம்முன்வண்டியின்சக்கரம் பெரிதாயிருந்தகாரணத்தால் தன் துதிக்கை எட்டாமற்போனபடியினாலே அது திடீரென்று அம்முன்வண்டிச்சக்கரத்தை மேலேதூக்கிப்பிடித்துக்கொண்டே அவன்தேகத்தை அவ்வண்டிதாண்டுமளவும்சென்று உடனே அவனைத்துதிக்கையால் தூக்கித்தப்புவித்தது. அவ்வாறு முன்வண்டியினின்றும்வீழ்ந்தவன் பின்வண்டியின் இந்தயானையினால் உதவிசெய்யப்பட்டிரானாயின் அம்முன்வண்டியின் சக்கரம் அவன்மீதேறி அவன் சின்னபின்னமாய்ப் போய்விட்டிருப்பானல்லவா? உடனே அப்பின்வண்டியின் யானை அம்முன்வண்டியின்சக்கரத்தைத் தூக்கிப்பிடித்ததுதான் வியக்கத்தக்கது. ஒருவருடைய பிரேரேபணையுமின்றியே அந்தயானைசெய்த இக்காரியம் அதன்பெருந்தன்மைக்குச்சான்றாகும். (இன்னும்வரும்.)

## ஓர் காடியின் கதை.

### 23-ம் அத்தியாயம்.

### சுகமான வாழ்க்கை.

அத்தோட்டத்துக்காவலாளி விக்கிரமவீரனிடத்து அதிகவிசுவாசம்பாராட்டிவந்தான். இப்போது மழைக்காலமானபடியால், விக்கிரமவீரன் அவ்விடத்திற்கு முதலில் வந்தபோது எத்தனைபெயர் வேடிக்கைபார்க்கவந்துகொண்டிருந்தார்களோ அத்தனை பெயர் இப்போது வராதபடியினாலே அக்காவலாளி விக்கிரமவீரனண்டை நெடுநேரம் உட்கார்ந்திருந்து அதனோடு விளையாடிக்கொண்டும், அதற்குச்சில வேடிக்கைகளைக்கற்பித்துக்கொண்டுமிருந்தான்.

அடிநாளையவழக்கத்தைப்போல் மழைக்காலமுழுவதும் தூங்குவதை விக்கிரமவீரன் இப்போது முற்றும் விட்டுவிட்டது. தினம் அதிகாலையில் அத்தோட்டத்துக்காவலாளி அதை எழுப்பி அதற்கு ஆகாரந்தந்தபின், வெளியேயிருந்தவளவில் அதைப்போகும்படிசெய்து அதன் அறையை நன்றாய்ச்சுத்திபண்ணிவருவது வழக்கம்; வெளியே அதிககுளிராயிருந்தபடியால் அங்கே தூங்க விக்கிரமவீரனுக்கு இசையவில்லை.

இம்மழைக்காலத்தில் இரவு நீடித்திருந்தபடியால் இரவுமுழுவதும் தூங்குவதே விக்கிரமவீரனுக்குப்போதுமானதாயிருந்தது. சற்றேறக்குறைய வருஷமுழுவதும் செடிகளில் ஒவ்வொருவகையான புஷ்பங்கள் புஷ்பித்துக்கொண்டிருந்தபடியாலும் அத்தோட்டம் எப்போதும் அழகாகவும் ரமணீகரமாகவும் தோன்றிக்கொண்டிருந்தபடியாலும், பகற்காலத்தில் குளிர்மிகுந்திருந்தும் அத்தோட்டத்திற்குச் சிலர் வந்துகொண்டிருந்தார்கள்.

மற்றக்காடிகள் அதிசமீபத்தில் இராமலிருந்தபோதிலும் விக்கிரமவீரன் அவைகளோடு எப்படியோ சிநேகஞ்செய்துகொண்டது. ஜனங்களெல்லாம்போய்விட்டபிறகு அக்காடிகள்யாவும் ஒன்றாய்ச்சேர்ந்துகொண்டு, தூரப்பிரதேசங்களிலே தத்தம் அடிநாளைய வாழ்க்கைகளைப்பற்றிச் சாயரட்சைவேளைகளில் நெடுநேரம்பேசிக்கொண்டிருக்கும்.

விக்கிரமவீரனும் வெண்காடியும் அத்தோட்டத்தில் அடுத்தடுத்துச் சமீபமாகவசித்துக்கொண்டிருந்தபடியால் அவ்விரண்டும் ஒன்றையொன்று பார்த்து நன்றாய்ப்பேசிக்கொள்ளும். அவ்விரண்டுகாடிகளுக்கும் தினே தினே நேசம்பெருகியது. சூரியவெளிச்சம் மிகக்குறைந்தும், பனியும் பனிக்கட்டிகளும் எங்கும் ஏராளமாய் நிறைந்துமிருக்கிற அவ்வெண்காடியின்வாசஸ்தலத்தைப்பற்றிக்கேட்பதில் விக்கிரமவீரனுக்கு எவ்வளவும் அயர்வு உண்டாவதில்லை.

வேனிற்காலத்தில் குழந்தைகள் தங்களுடைய தாதிமார்களோடு தினந்தப்பாமல் தோட்டத்தில் விளையாடவருவதுண்டு. அந்தச்சமயங்களிலே அக்குழந்தைகள் விக்கிரமவீரனுடைய குழியண்டை போகநேரிடுமானால் உள்ளே தலையிறங்கிப்பார்த்து விக்கிரமவீரனுக்கு உருசியான ஏதேனும் பலகாரத்தைப் போட்டுவருவதுவழக்கம். இவ்வழக்கத்தினாலே விக்கிரமவீரன் அந்தந்தமணிநேரங்களில் குழந்தைகள் வருமென்று எதிர்பார்த்திருந்து, அவர்கள் அப்படியே வருவார்களாகில் அவர்கள் பார்த்துக்களிக்கத்தக்கதாக ஏதேனும் வேடிக்கைகாட்டிவந்தது.

இப்படியிருக்கையில் ஒருநாள் தன் பழையசிநேகிதனாகிய காடன் அவனுடைய இரண்டுகுமாரர்களாகிய மூப்பன் கோலன் என்னும் சிறுவர்களையிட்டுக்கொண்டு அத்தோட்டத்திற்குவந்தபோது விக்கிமவீரன் அவர்களுடைய குரலோசையைக்கேட்டுஅவர்களைப்பார்த்தமாத்திரத்தில், அவர்கள்முன்னிருந்ததைவிட இப்போதுவயதுமுதிர்ந்து உருமாறி இருந்தபோதிலும் அவர்கள் இன்னாரென்று தெரிந்துகொண்டதுமல்லாமல், அவர்களும் தன்னை இன்னகாடிதானென்றறிந்துகொண்டிருப்பார்களென்றும் தனக்குள்ளேநினைத்துக்கொண்டது; ஏனெனில், விக்கிரமவீரனுடைய உணவுக்காக முன்னேஅவர்கள் சேகரித்தகொட்டைகளைப்பற்றியும், நெடுநாள்வரையில் அது தங்களோடுவசித்துக்கொண்டிருந்த பழையதொழுவத்தைப்பற்றியும் அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

விக்கிரமவீரன் இப்போது தான் எவ்வளவு சௌக்கியமாய் வாசஞ்செய்துகொண்டிருந்ததோ அதைப்பற்றியும், தன்னிடத்தில் ஒவ்வொருவரும் பாராட்டும் பரிவைப்பற்றியும் தன்னுடைய பழையசிநேகர்களாகிய காடனுக்கும் அவனுடைய இரண்டு குமாரர்களுக்கும் சொல்லத்தனக்குச்சக்தியிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்குமென்று கவலையுற்றது. ஆயினும் தான் அதிகபுஷ்டியாகவும் நல்லஸ்திதியிலுமிருப்பதைப்பார்க்கும்போது தான் சுகமாகவே வாழ்ந்துகொண்டிருப்பதை அவர்கள் யூகித்துக்கொள்ளக்கூடுமென்று நினைத்து அது ஒருவாறு மனந்தேறியது.

இப்படியிருக்கையில், ஒருநாள் எவனோ அன்னியனொருவன் விக்கிரமவீரனிருந்தகுழிக்கருகில்கிராதிக்கு நேராக உட்கார்ந்துஅதன்செய்கைகளையெல்லாம்பார்த்துக்கொண்டிருந்தான். அவன் நெடுநேரம்வரையில் அவ்விடத்திலேயே உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருந்தபடியால், இவன் ஒருவேளை இவ்விடத்திலிருந்து நம்மையிட்டுக்கொண்டுபோகத்தான் நினைத்துக்கொண்டிருக்கிறானோ என்றஞ்சி விக்கிரமவீரன் மனக்கிலேசங்கொண்டது. அவன் மறுநாளும் அப்படியேவந்து விக்கிரமவீரனுக்குச்சமீபமாக நட்டிருந்த ஒருகம்பத்தில்மாட்டிய ஓர் பெரும்பலகைக்குப்பின்புறமாக உட்கார்ந்துகொண்டிருந்தான்.

நெடுநாள்வரையில் அவன் அவ்விடத்தில் உட்கார்ந்திருந்து சிறிதுநேரம் அந்தப்பலகையையும் சிறிதுநேரம் விக்கிரமவீரனையும் பார்த்துவந்தபடியால் நாளாவர்த்தியில் விக்கிரமவீரனுக்குப் பயந்தெளிந்து கிராதியண்டைவந்து உட்காரத்தலைப்பட்டது. இதைக்கண்டு அவன் சந்தோஷமடைந்து அதற்குச்சிலபலகாரங்கள் கொடுத்துவந்தான். பிறகு விக்கிரமவீரனும் அந்த ஆளும் மிகவும் சிநேகமாய்விட்டார்கள்.

இவ்வாறு விக்கிரமவீரன் சிலவருடங்களாய்ச் சௌக்கியமாகக் காலங்கழித்துவந்தது. இச்சுகமானவாழ்க்கையினாலே அது மிகவும் கொழுத்துவிட்டது. அதற்கு வயதேறிவிட்டபடியால் முன்னே செய்துவந்தவேடிக்கைகள் முதலியவிளையாட்டுகளில் இப்போது அது காலங்கழிப்பதில்லை.

பகற்போது குறைந்தும் குளிர்மிகுந்துமிருக்கத்தக்க கார்காலத்தில்மாத்திரம் விக்கிரமவீரன் வெளியே நெடுநேரமிருக்கமுடியாமல் உள்ளேயே வேலையற்றுச் சும்மாவிருக்கவேண்டியதாய் நேரிட்டபோது அதற்குச் சிலசமயங்களில் பொழுதுபோகாமல் மிகவுஞ்சங்கடமாயிருந்தது. வேறே எந்தவிஷயத்தைப்பற்றியும் குறைசொல்லிக்கொள்ள அதற்கிடமில்லை. இவ்விஷயம் அதற்கு நன்றாய்த்தெரிந்தேயிருக்கிறது. அத்தோட்டத்துக்காவலாளி அதனிடத்தில் எப்போதும் பட்சமாகவும் சாந்தமாகவுமிருந்துவந்தான். அன்றியும், முன்னேயிருந்த எஜமானர் எல்லோரினும் அக்காவலாளி அதன்கருத்தையும் எண்ணங்களையும் நன்றாயறிந்துவந்தான். அக்கம்பக்கத்திலிருந்த மற்றக்கரடிகளும் மனதிற்கிசைந்ததோழமைக்குரியவைகளாயிருந்தன. அவைகள் இன்னும் சிறிது சமீபத்திலிருக்குமானால் ஒன்றோடொன்று இன்னும் சுலபமாய்ப் பேசிக்கொண்டு அதிகநேசத்தோடு நாள்கழித்துவரும். இவ்வாறு தனக்கு அதிசமீபத்தில் தன்னோடுகூடத் தோழமைகொள்ளத்தக்க ஒருகரடிமாத்திரமிருக்குமாயின் தனக்கு ஒன்றுங் குறைவில்லாமல் பூரண சௌக்கியமடையலாமென்று விக்கிரமவீரன் நினைத்துக்கொண்டிருந்தது. இக்கருத்தை அத்தோட்டத்துக்காவலாளி உடனேதெரிந்து நூதனமாய் ஓர் சிறியகரடியை இட்டுக்கொண்டுவந்து விக்கிரமவீரனுடைய அறைக்குள்விட்டான். அதுநிற்க.

இந்தப்படி இச்சிறுகரடியைக்கொண்டுவந்து அவன்விட்டதற்கு ஒருவாரத்திற்குமுன்னே ஒருநாள் அதிகாலையில் அக்காவலாளி புதிதாய் இரண்டு ஆள்களை விக்கிரமவீரன் அறைக்குள் இட்டுக்கொண்டுவந்தான். அவர்கள்கையில் பலவகையான கழிகளும் கருவிகளுமிருந்தபடியால் அவர்களைப்பார்க்கப்பார்க்க விக்கிரமவீரன் திகிலடைந்தது. "இவர்கள் இப்போது எனிங்குவருகிறார்கள்? ஈதெல்லாமெதற்காக? நிம்மதையாகவும் சௌக்கியமாகவுமிருக்கிற நம்வாழ்க்கை இன்றோடே முடிவுபெறுமோ? நம்மை இவர்கள் கொல்லத்தான் வந்தார்களோ? வேறேஇடத்திற்கு இட்டுக்கொண்டுபோகநினைக்கிறார்களோ? இன்னும் நமக்கு என்ன ஆபத்துவிளையுமோ?" என்று விக்கிரமவீரன் நடுக்கத்தோடு நினைத்து மனங்கலங்கிக்கொண்டிருந்தது.

இந்தப்படி விக்கிரமவீரன் பயந்துகொண்டிருக்கையில், அத்தோட்டத்துக்காவலாளி அதற்குச்சமீபத்தில் உட்கார்ந்துகொண்டு அதன்தலையைமெல்லத்தட்டித்தடவிக்கொடுத்துப் பயப்படாதே என்றுகூறினான். உடனே அந்த இரண்டுஆள்களும் வேலைசெய்யத்தொடங்கினார்கள். அவர்கள் விக்கிரமவீரனுடைய அறைக்கு எதிரிலுள்ள குழியின்சுவரையிடித்து ஆழமாய்த்தோண்டி விக்கிரமவீரனுடைய அறையைப்போன்ற அவ்வளவுபெரிதான ஒரு அறையை ஏற்படுத்தினார்கள். இவ்வேலையைச்செய்துமுடிக்க அவர்களுக்குச் சில நாள்பிடித்தது. அந்த ஆள்கள் அந்த அறைக்கு வேண்டிய பள்ளத்தை வெட்டியானபிறகு கொல்லற்றுக்காரர்கள் கல் முதலியவற்றைக்கொண்டுவந்து நாற்புறமும் சுவரெழுப்பி உயரமாய் ஒருசாளரத்தையமைத்துப் பலமும் அழகுமுள்ள ஒரு கதவையும்மாட்டினார்கள்.

இவ்வாறு அவர்கள்செய்துகொண்டிருந்த வேலைகளையெல்லாம் விக்கிரமவீரன் எவ்வளவு பிரீதியோடு பார்த்துக்கொண்டிருந்தது! அந்த ஆள்கள் முதலில் விக்கிரமவீரனுக்குச்சிறிதுபயந்தபோது அத்தோட்டத்துக்காவலாளி விக்கிரமவீரனோடுகூடவே சற்றேறக்குறைய நாள்முழுதுமிருந்து அவர்கள் பயந்தெளிந்தபின்போய்விட்டான். விக்கிரமவீரனும் வரவர அந்த ஆள்களிடத்தில் முதலிலே கொண்டபயம் நீங்கி அவர்களுக்குச்சமீபமாகச்சென்று தனக்கு இஷ்டமானபோது அப்புதுஅறைக்குப்போவதும் வெளியேவருவதுமாயிருந்தது.

இவ்வளவுகாரியம்நடந்தும் இன்னகாரணத்திற்காக அவ்வறை ஏற்படுத்தப்பட்டதென்பதை விக்கிரமவீரன் தெரிந்துகொள்ளவில்லை. “நம்முடைய பழைய அறை மிகவும் வசதியாயிருக்கிறதே, நமக்குவேறே எதுவும் வேண்டியதில்லையே, இவர்கள் என் இவ்வளவு சிரமையெடுத்துக்கொள்ளுகிறார்கள்?” என்று அது வியந்துகொண்டிருந்தது.

செய்யவேண்டியவேலையெல்லாம் செய்தானபிறகு படுப்பதற்காக வைக்கோலும் குடிப்பதற்காகத்தண்ணீர்ப்பாத்திரமும் மூலைகளில் வைத்துவிட்டு அந்த ஆள்கள் போய்விட்டபடியால், “இனி என்னநடக்கப்போகிறதோ பார்க்கலாம்” என்று விக்கிரமவீரன் நினைத்துக்கொண்டிருக்கையில், அத்தோட்டத்துக்காவலாளிவழக்கப்பிரகாரம் அதைப் படுத்துக்கொள்ளும்படிசெய்துவிட்டு “க்ஷேமமாய்த் தூங்குவாயாக.” என்று சொல்லி வேறு விஷயத்தைப்பற்றி ஒன்றும் பேசாமற்போய்விட்டான்.

ஆயினும் மறுநாள் அவனுடைய கருத்து இன்னதென்பதை விக்கிரமவீரன் கண்டுபிடித்தது. தனக்கென்று ஏற்படுத்தப்பட்ட அறை சித்தமாகிறவரையில் காத்துக்கொண்டிருந்த ரஷ்யாதேசத்துக்கரடி அக்குழிவழியாய் இறக்கிக்கொண்டுவரப்பட்டது. அது மிகச்சிறிது. நாயைவிடப்பெரிதாயிருக்கவில்லை. ஆயினும் விக்கிரமவீரன் அதுவரையில் பார்த்துள்ள கரடிகள்யாவற்றினும் அதுமிகவும் அழகாயிருந்தது. அதன் உரோமங்கள் நீண்டு மிகவும் கறுத்தும், அதன்சிறுகண்கள் வைரக்கற்களைப்போல் அழகாய் மின்னிக்கொண்டிருந்தபடியால் அதைப்பார்க்கப்பார்க்க விக்கிரமவீரனுக்கு மிகவும் மனோகரமாயிருந்தது.

விக்கிரமவீரனைப்பார்க்க முதலில் அச்சிறுகரடிக்குச் சிறிதுநாணமிருந்தபோதினும் விக்கிரமவீரன் அந்நாணத்தை ஒருபொருளெனமதியாமல் “பழகப்பழக இதற்கு நாணம் நீங்கிவிடும், பிறகு நாம் கூடி எப்படி விளையாடலாம்?” என்று தனக்குள் ஆலோசித்துக்கொண்டு திருப்தியடைந்தது. விளையாடிக்கொண்டு வேடிக்கையார்த்தமாயிருப்பதற்கேற்ற அவ்வளவு பாலியகரடியைக்கூட்டாளியாய்க் கிடைக்கப்பெற்றதனால் தனக்குண்டாகிய சந்தோஷமிகுதியினாலே விக்கிரமவீரன் தனக்கு வயதேறிவிட்டவிஷயத்தையும், சிலதினங்க

ளுக்குமுன்னே விளையாடலைவிட்டு அமைவாகத் தானிருந்த விஷயத்தையும் மறந்துவிட்டது.

அவ்விரண்டுகரடிகளுக்கும் தனித்தனியே இரண்டுபாத்திரங்களில் ஆகாரங்கொடுக்கப்பட்டன. சிலநாள்வரையில் செல்வியென்னும் அச்சிறுகரடி நாணங்கொண்டேயிருந்தபடியால் காவலாளிகள் கூடவேயிருந்தார்கள். நாளாவர்த்தியில் அதன் நாணம் நீங்க அது விக்கிரமவீரனோடு பிறந்தநாள்தொடங்கி நேசமாயிருந்ததுபோல் இங்குமங்கும் ஓடி விளையாடிச்சந்தோஷமாயிருந்தது. அவ்விரண்டுகரடிகளும் தத்தம் கருத்தை வெகுசீக்கிரத்தில் தெரிந்துகொள்ளத்தலைப்பட்டபிறகு, விக்கிரமவீரன் தன்னுடைய வாழ்நாளில் நடந்த விர்த்தாந்தங்களையெல்லாம் செல்வியாகிய அச்சிறுகரடிக்குச்சொல்லி அதை மகிழ்வித்துக்கொண்டுவந்தது.

“எவ்வளவுபெரியகாரியங்களையெல்லாம் இதுசெய்திருக்கிறது! எவ்வளவு அநுபவம் இதற்கிருக்கவேண்டும்! இதற்கு எவ்வளவோவயதாயிருப்பதாகத் தோன்றுகிறது!” என்று செல்வி விக்கிரமவீரனைப்பற்றித்தனக்குள்ளே வியந்துகொண்டிருந்தது. செல்வி என்னும் அச்சிறுகரடி விக்கிரமவீரனதுகாலண்டை உட்கார்ந்துகொண்டு, மலைகளைப்பற்றியும், காடுகளைப்பற்றியும், திராட்சச்சோலைகளைப்பற்றியும், கனிமரத்தோட்டங்களைப்பற்றியும் விக்கிரமவீரன் பெரிய கதைகளைச் சொல்லிக்கொண்டுவருகையில் கேட்டுக்கொண்டேயிருந்து தூங்கிவிடும்.

சிறிதுகாலத்திற்குமுன்னே பொழுதுபோகாமலல்லவோ விக்கிரமவீரன் சங்கடப்பட்டுக்கொண்டிருந்தது? இப்போது அச்சஞ்சலமும் ஒழிந்தது. ஆகையால் விக்கிரமவீரனுக்குத் தன் வாசஸ்தலத்தில் யாதொருகுறைவுமில்லை. வேலையற்றுமந்தமாயிருக்கத்தக்க மழைக்காலமுழுதும் சுகமாய்க்கழிந்தது. அடுத்த இளவேனிற்பருவத்திற்குள் செல்வி முன்னிருந்ததைவிட மிகவும் பெரிதாய்வளர்ந்துவிட்டபோதினும் விக்கிரமவீரனைப்போல் அவ்வளவுபெரிதாகவில்லையாகையால் விக்கிரமவீரனிடத்தில் எப்போதும் வணக்கத்தோடு மரியாதை பாராட்டிவந்தது.

## இந்துவிவாகச்சடங்குகள் சிலவற்றின் சாஸ்திரோக்த சரித்திரபூர்வக விவரணம்.

(தொடர்ச்சி.)

3. விவாகச்சடங்குக்கு முன்னர் பிரதமத்தில் மாப்பிள்ளைக்குச் சகலவருணத்தாரும் நலங்கிட்டுவருகிறார்கள். அதற்கு ஒருதகுந்தகாரணமுண்டு. சாஸ்திர ஆராய்ச்சியிலிருந்த பிரமசாரிக்கு உலகஇன்பம் இப்படிப்பட்டதென்று தெரியாதாகையால் பெண்கள்பலரும் சந்தன முதலிய கலவைச்சாந்தால் அவனை ஸ்பரிசிக்கையில் அப்பிரமசாரி தன்மனமும் தேகமும் நலங்க (குழைய) ப்பெறுகிறானாகையால் அச்சடங்குக்கு நலங்கு என்னும்பெயர்வழங்கிவருகிறது. பிறகு அவன் இன்பத்தைவிழைந்து விவாகத்தில் மனதைச்செலுத்தவேண்டியதற்காக ஸ்பரிசவுணர்ச்சியினாலே பலரும் அவனுக்கு இன்பத்தை நினைப்பூட்டுதலே நலங்கின்தொனியர்த்தமாகும்.

4. விவாககாலத்தில் மாப்பிள்ளைக்குக் கங்கணங்கட்டுவதற்கும் பிறகு கங்கணம் அவிழ்ப்பதற்கும் அர்த்தமுண்டு. விவாகமாகிய வேள்வியை இடையூறின்றி நிறைவேற்றுவதற்காகக் கடவுளைத் தியானித்து எத்தகைய இடையூறுவரினும் அதையெல்லாம்வென்று விரதசீலபயபக்தியாகவிருந்து விவாகச்சடங்கை முடிப்பதற்காகக் கயிறு மாப்பிள்ளையின் வலக்கரத்திற் கட்டுவதே கங்கணந்தரிப்பதென்னும் சடங்கின் அர்த்தம். விவாகச்சடங்குகள் பூர்த்தியானபிறகு அக்கங்கணத்தை யவிழ்ப்பதே காப்புகளைவது அல்லது கங்கணவிசர்ஜ்ஜனம் என்னும் சடங்கின் தாற்பரியம்.

5. விவாகச்சடங்குகள் நடத்தப்படும் தத்துவக்கூட்டச்சதுக்கமென்னும் மணப்பந்தலில் செய்யப்படுகிற ஏனையகாரியங்களெல்லாம் அனேகதேவர்கள்முன்னிலையில் பிரமாணபூர்வகமாகப்பெண்ணும்பிள்ளையும் ஒருவருக்கொருவர் வாக்குத்தத்தஞ்செய்வதற்கு அறிகுறியாகும். அவற்றுட் சிலவற்றை விவரிப்போம்:— இந்துக்களுடைய சித்தாந்தப்படி திக்குப்பாலகர்கள் எட்டுதேவதைகளானபடியால் கிழக்குத்திசைக்கு அதிதேவதையாகிய தேவேந்திரனுக்கு அறிகுறியாய் மணவறையின் கீழ்ப்பாரிசத்தில் கிளைவிளக்கு ஒன்று ஏற்றிவைக்கப்படுகின்றது. தேவேந்திரன் ஆயிரங்கண்ணுடையானென்பது இந்துக்களுடைய சித்தாந்தமாகையால் அனேக கிளைகளோடுள்ள அவ்விளக்கில் ஏற்றும் தீபங்களனைத்தும்அவனுடைய கண்களுக்கு அறிகுறியாகவிளங்குகின்றன. அக்கினிபகவான் தென்கிழக்குக்கு அதிதேவதையாகையால் அக்கடவுளுக்கு அறிகுறியாகக் குடவிளக்கேற்றிவைப்பது வழக்கம். தெற்குத் திசைக்கு அதிதேவதை யமதருமராஜனானபடியால் அத்தேவதைக்கு அறிகுறியாகத் தர்மகர்ம பாபபுண்ணியப் பகுப்புக்குரிய புரோகிதர் உட்கார்ந்துகொள்ளுகிறார். மானிடர் செய்யும் பாபத்தைப் போக்குவதற்காக அவர்களைத்தண்டித்தும், புண்ணியத்திற்காக அவர்களைச் சுவர்க்காதி பதவிகளுக்கனுப்பியும் வரும் யமதருமராஜனைப்போல், பூலோகத்தில் மானிடர் செய்யும் பாபங்களுக்குப் பிராய்ச்சித்தங்கள் செய்தும்,புண்ணியங்களுக்கு ஆசீர்வதித்தும் வரும் புரோகிதர் ஆரியமதக் கோட்பாட்டின்படி யமதருமனுக்கு அறிகுறியாகின்றார். தென்மேற்குத்திசைக்கு அதிதேவதையாகவும், இராட்சதத் தலைவனாகவுமுள்ள நிருதிக்கு அறிகுறியாய் நாணம் முதலிய குணங்கள் நீங்கிய தாசியை நிற்கவைத்து மணமகளுக்குரிய உபசாரங்களைச் செய்துகொண்டு உபசாரத்தோழியாயிருக்கச்செய்வதுவழக்கம். வருணன் அதிதேவதையாயுள்ள மேற்குத்திக்கில் மணமகன் - மணமகள் ஆகிய தம்பதிகளிருந்து விவாகச்சடங்கை நிறைவேற்றுகிறார்கள். இல்லறதருமத்தைவழுவாது தம்பதிகள் நடத்துவார்களாகில் பிரமசாரி-வானப்பிரஸ்தன்-சந்நியாசி என்னும் ஏனைய மூவகை ஆச்சிரமத்தார்க்கும், தென்புலத்தார்-தெய்வம்-விருந்தினர்-உறவினர்-அரசர் ஆகிய இவர்களுக்கும் சிரம்ப உபகாரமுண

டாகுமாதலாலும், உலகத்திலுள்ள எல்லாவுயிர்களுக்கும் மழையினால் உபகரிப்பவன் வருணனேயாதலாலும் அவ்வருணதிசையாகிய மேற்குத்திக்கில் தம்பதிகளையிருத்துவது நியாயமாயிருக்கிறது. வடமேற்குத் திசைக்கு அதிதேவதையாகிய வாயுபகவானுக்கு அறிகுறியாய் மாப்பிள்ளைத்தோழன் கையில் சிவிறியேந்தி மணமகனுக்கு உபசாரஞ்செய்து கொண்டிருப்பது வழக்கம். வடக்குத்திசைக்கு அதிதேவதையாகிய குபேரனுக்கு அறிகுறியாக விவாகச்சடங்குகளுக்கு வேண்டிய பணப்பையை வைத்திருக்கும் பந்து ஒருவனை இருக்கப்பண்ணி, பொற்பூரி-தாணம் முதலியவற்றைக் கொடுக்கச்செய்வது வழக்கம். வடகிழக்குத் திசைக்கு அதிதேவதையாகிய ஈசானமூர்த்தியைத் தியானித்து அம்மிக்குங் குழவிக்கும் அபிஷேகமாட்டிச் சந்தனம், அட்சதை, புஷ்பம் முதலியவைகளைத் தரித்து அவைகளை அத்திசையில் வைப்பது வழக்கம்.

6. ஆரியசித்தாந்தப்படி நவக்கிரகங்களும் சப்தரிஷிகளும் சப்தநதிகளும் பூசிக்கப்படுபவராதலால் அவர்கள் முன்னிலையில் பிரமாணபூர்வகமாக விவாகச்சடங்குகள் நடத்தப்படவேண்டுமென்னுங் கருத்தையுட்கொண்டு, சூரியன் முதல் கேது ஈறாகவுள்ள நவக்கிரகங்களுக்கு அறிகுறியாக நவதானியங்களையும், அகஸ்தியர் முதல் வசிஷ்டர் ஈறாகவுள்ள சப்தரிஷிகளுக்கு அறிகுறியாக ஏழு சிறுகலசங்களையும், அக்கலசங்களிலே, கங்கைமுதல் கன்னியாகுமரி ஈறாகவுள்ள சப்தநதிகளுக்கு அறிகுறியாக சிவாலயம்-விஷ்ணுவாலயம்-பிராமணர்வீடு-பசுத்தொழும்-நந்தவனம் - மேற்குநோக்கிச்செல்லும்நதம்-கிழக்குநோக்கிச்செல்லும் நதி ஆகிய இவ்விடங்களிலிருந்து கொண்டுவரும் தீர்த்தங்களையும் அமைத்துவைக்கின்றனர். பிரமா விஷ்ணு உருத்திரன் என்னும் திரிமூர்த்திகளுக்கு அறிகுறியாக அரசு-ஆல்-கல்யாணமுருக்கு என்னும் மூன்று மரங்களின் கிளைகளை ஒன்றாய்க்கட்டி அதற்கு அபிஷேகஞ்செய்து தூப தீப நைவேத்தியங்காட்டி, அத்திரிமூர்த்திகளின் சக்திகளாகிய சரஸ்வதி-லட்சுமி-பார்வதி என்னும் மூன்றுதேவிகளுக்கு அறிகுறியாக வயது முதிர்ந்த மூன்றுமாங்கிலியஸ்திரீகள் அதைத்தம்பதிகளுக்கு நேராக ஒரு சிறுகுழியில் நடுவது வழக்கம்.

7. மாங்கல்யதாரணஞ்செய்யுங்காலத்தில் மணமகன் முதல்முடிபோடும்போது புரோகிதர் பிரம மந்திரம்சொல்வதும், இரண்டாவது முடிபோடும்போது விஷ்ணுமந்திரம் ஜெபிப்பதும், மூன்றாவது முடிபோடும்போது உருத்திரமந்திரம் உச்சரிப்பதும் - பிரமாணங்கள் யாவற்றுள்ளும் சிறந்த பிரமாணமாக ஆரியர்களால் கருதப்படுகின்றன. ஏனெனில், சிருஷ்டி, திதி, சம்ஹாரம் என்னும் முத்தொழிலுக்குரிய மூன்றுதேவதைகளுமறிய மணமகனும் மணமகளும் ஒன்றுபடுவார்களாகில் அவர்கள் பிறகு ஒருவரை ஒருவர் வஞ்சியாமல் இல்வாழ்க்கைத்தருமத்தைக் கருத்தொருமித்து நடத்தக்கடமைப்படுவார்களென்பது துணிபு. (இன்னும் வரும்.)

# மரணவகைகள்.

தேகத்தைச்சேர்ந்த புறத்துறுப்புகளென்னும் இவற்றுள் ஏதேனும்தன்தொழிலைச்செய்வதற்குமுற்றும்சக்தியற்றதாய் நிலைகுலைந்து கெட்டுப்போமாகில் அவ்வுறுப்புக்கு மரணம் நேரிட்டதாகக்கூறலாம். இவ்வாறு நமக்கு நேரிடக்கூடிய மரணவகைகளை உறுப்புகளின் மரணமென்றும் பொதுவாய் தேகத்தின் மரணமென்றும் தேகதத்துவசாஸ்திரிகள் இருவகையாக வகுத்திருக்கின்றனர். உறுப்புகளைப்பற்றிய மரணம் நமக்குச்சதாநேரிட்டுக்கொண்டேயிருக்கின்றது. நம்முடையதேகத்திலிருக்கும் சருமத்தின் அணுத்திரள்களுக்குள் ஒவ்வொன்றும் சதா அழிந்துகொண்டேபோக அதற்குப்பார்த்தியாக நூதனமாய் அணுக்கள் தோன்றிக்கொண்டேயிருக்கின்றன. உதிரத்திலுள்ள ஒவ்வொரு அணுவும் இவ்வாறே க்ஷணத்துக்கு க்ஷணம் உருமாறி அழிகின்றது. அதற்குப்பர்த்தியாக நம்முடைய உணவாதிகளிலுள்ள சாராம்சங்களே அணுக்களாக உருமாறி உதிரத்தைப்போஷித்துக்கொண்டு வருகின்றன. இந்தப்படி நம்முடைய தேகத்திலுள்ள சில உறுப்புகள் நமக்குத்தெரியாமலே மரணமடைந்துவருகின்றன. இத்தகையமரணத்தினால் நமக்கொன்றும்பாதகமில்லை. ஏனெனில், அவைகள் மரணமடையும்போதே அவற்றிற்குநிகராக வேறே சிலவற்றால் பர்த்திசெய்யப்படுகின்றன. நரம்பு - தசை-சில நிணங்கள் - எலும்பு ஆகிய இவ்வுறுப்புகளுக்குச்சேதம் நேரிட்டு அவை பயன்படாமற்போகுமானால் நமக்குத்துன்பம் விளைகின்றது. ஆயினும் தகுந்த சிகிச்சையைக்கொண்டு அவற்றை வளரச்செய்வதனாலாவது வேறே வகையினாலாவது சீக்கிரத்தில் அவைகளையும்பர்த்திசெய்துகொள்ளலாம். இதனால் சில உறுப்புகளின் மரணங்களினாலே பிராணனுக்கு முழுமோசமுண்டாவதற்கிடமில்லையென்றேற்படுகின்றது. அதுநிற்க.

பொதுவாய் தேகத்தைப்பற்றிய மரணத்தை, பிராணஹானியை உடனே விளைவிக்கக்கூடிய சில முக்கியமான உறுப்புகளின் மரணமென்றும், தேகத்தின் பௌதிகப்பொருள்கள் பிரிந்து போகும்படி நேரிடும் சரீரக்கட்டமைதியின் மரணமென்றும் இருவகையாகச் சாஸ்திரிகள் வகுத்திருக்கிறார்கள். எந்த உறுப்புகளின்தொழில் நின்றமாத்திரத்தில் பிராணஹானி நேரிட்டு ஏனைய உறுப்புகளெல்லாமிருந்தும் பயனற்றவைகளாய் முடியுமோ அந்த உறுப்புகளைக்குறித்துச் சிறிது பரியாலோசிப்போம். ஒருவனுக்கு அளவிறந்த வியாதிகள்நேரிட்டபோதினும், இறுதியில் அவனுடைய பிராணஹானிக்கு நேரான காரணம் எதுவென்று விசாரிக்கையில், இருதயமென்னும் இரத்தாசயம் எந்தக்காரணத்தினாலாவது தொழிலற்றுப்போவதாகிலும், சுவாசாசயம் என்னும் ஈரல் எந்தவகையினாலாவது செயலற்று நின்றுவிடுவதாகிலும், உணர்ச்சிநிலையாகிய மூளை எவ்விதத்திலாவது இயக்கமற்றிருப்பதாகிலுமென்று தெரியவருகிறது.

இம்மூன்றுமுக்கியமான உறுப்புகளின் குணத்தையும் தொழிலையும்பற்றி யோசிப்போம். இருதயஸ்தானமானது இரத்தாசயஸ்தானமாகும். அங்கிருந்துதான் உதிரம் தேகத்தின் ஏனைய உறுப்புகள் யாவற்றிற்கும் பரவுவது. ஏனைய உறுப்புகளுக்குச்செல்வதனால் அசுத்தப்படும் உதிரம் சுத்தமாவது இருதயஸ்தானத்திலேதான். இரத்தாசயமாகிய இருதயஸ்தானம் சதா குவிந்தும் விரிந்தும் இயங்கிக்கொண்டிருக்கிறபடியினால்தான் பிராணன் நிலைத்திருக்கிறது. எந்தகாரணத்தினாலாவது அதன் இயக்கம் நின்றுவிடுமானால் உடனே பிராணஹானி சம்பவிக்கும். இதைத்தான் சாதாரண ஜனங்கள் மாரடைப்பு என்று சொல்வது. இரத்தாசயமாகிய இருதயத்தின் இயக்கம் நிற்பதனால் நேரிடும் மரணம் சடுதியானது. அப்போது எவ்வித பிரயாசையும் தோன்றாது. இதைச்சுதேசவைத்தியர்கள் அனாயாசமரணமென்பார்கள். இருதயத்தின் இயக்கம்நின்றுவிடுவதற்கு ஒருவினாடி முன்வரையில் மனிதனுக்கு இன்னது நமக்கு நேரிடப்போகிறதென்று தெரியவே தெரியாது. அதனியக்கம்நின்றமாத்திரத்தில் பிரக்ஞையற்றுவிடும்.

சுவாசாசயமாகிய ஈரல் நாம் உஸ்வாஸநிஸ்வாஸம்பண்ணுவதற்கு இன்றியமையாக்கருவி. இது சதா துருத்தியைப்போல்இயங்கிக்கொண்டேயிருக்கிறது. அடிக்கடி சுத்தவாயு உள்ளேசெல்லும்போதெல்லாம் துருத்திபோலியங்கும் சுவாசாசயமாகிய ஈரல்அச்சுத்தவாயுவைக்கொண்டு இருதயத்திலுள்ள உதிரத்தைச் சுத்தப்படுத்திக்கொண்டேயிருக்கிறது. அவ்விடத்திலுள்ள உதிரங்களின் அசுத்தங்களை அவ்வீரல் நாம் நிஸ்வாஸஞ்செய்யும்போது வெளியே கொண்டுவந்துவிடுகின்றது. ஆகையால், இருதயஸ்தானமாகிய இரத்தாசயத்திலுள்ள உதிரம் சுவாசாசயமாகிய ஈரலினால் சுத்தமாக்கப்படாவிடில் இரத்தாசயத்தின் இயக்கத்தினாற்பயனில்லை. அசுத்தமான உதிரம் பிராணஹானியைவிளைக்கும். ஆகையால், சுவாசாசயத்தினுடைய இயக்கமும் பிராணனுக்கு அத்தியாவசியமென்று ஏற்படுகின்றது. க்ஷயம்-காசம்-இருமல் முதலிய வியாதிகளினாலே சுவாசாசயம்கெட்டுச் சுத்தவாயுவை உட்கொள்வதற்கு எந்தத்தருணத்தில் சக்தியற்றுப்போகின்றதோ அந்தத்தருணத்திலேயே பிராணஹானிநேரிடுமென்று நிச்சயமாய்க்கூறலாம். காற்றில்லாத அறையில் அடைபட்டிருக்கும்போதாவது, ஜலத்தில்அமிழும்போதாவது சுவாசாசயந்தான் முன்னே பாதிக்கப்படுகின்றது.

சகலவகையான உணர்ச்சிக்கும் ஸ்தானமாகியமூளைக்குத்தீங்கு நேரிட்டாலும் பிராணனுக்கு ஹானிஉடனேவிளையும். ஏனெனில், உயிரோடுகூடியமனிதனுக்கும் உயிர்நீங்கிய பிரேதத்துக்குமுள்ளவித்தியாசமெல்லாம் உணர்ச்சியொன்றேயல்லவா? ஆகையால், இரத்தாசயம்-சுவாசாசயம்-மூளை என்னும் இம்மூன்றே உயிருக்கு இன்றியமையாக்கருவிகளென்றுகூறலாம். இம்மூன்றனுள்ளும் இரத்தாசயமும் சுவாசாசயமும் மிகவும் முக்கியமானவை. இவைகளின் இயக்கம் நின

றமாத்திரத்தில் பிராணன்நீங்குமென்பதற்கு எவ்வளவும் ஐயமில்லை. எத்தனைவியாதிகள் என்னென்னவிதமாய் ஏனைய உறுப்புகளை எத்தனைநாளாகப்பாதித்துவரினும் அவைகளினால் நேரே பிராணஹானி விளையமாட்டாது. இறுதியில் இவ்விரண்டு கருவிகளுக்கு ஊனம் நேரிடும்போதுதான் பிராணன்நீங்குவது. மேலே சொல்லப்பட்ட இரண்டுகருவிகளும் இயக்கமற்றபோது மூளையும் பயனற்றதாய்விடுகின்றது. சுவாசாசயத்தையும் இரத்தாசயத்தையும் சில உபாயங்களினாலே இயங்கிக்கொண்டிருக்கும்படியேசெய்து மூளையை அப்புறப்படுத்திப்பார்க்கையில் பிராணனிருந்ததாகவே சில சந்தர்ப்பங்களில் தெரியவந்தது. மேற்போந்த காரணங்களினாலே, இரத்தாசயமும் சுவாசாசயமும் பிராணன் நிற்பதற்கிரண்டுகால்களெனும் பெயர்பெற்றிருக்கின்றன. இவைகள் மரணமடையுமாயின் (எனவே தொழிலறுமாயின்) ஏனைய உறுப்புகள்யாவும் இருந்தும் இராமைக்கு நிகரேயாம்.

இனி சரீரக்கட்டமைதியின் மரணத்தைக்குறித்துச் சிறிதுகூறுவோம்:—பிராணாதாரமாகியமுக்கியமானகருவிகள் இயக்கமற்றுப்போவதனால் மரணம்சம்பவிக்கும்போது சிறிதுநேரம்வரையில் தேகத்தின்கட்டமைதி கெடுவதில்லை. எல்லாம் அந்தந்த இடங்களில் சலனமற்றுநிற்கின்றன. சிறிதுநேரம்பொறுத்துப் பௌதிகப்பொருள்களெல்லாம் பிரிந்து கட்டமைதி நிலைகுலையத்தலைப்படுகின்றது. பிராணாதார உறுப்புகள் இயங்கிக்கொண்டிருக்கும்வரையில் தேகத்தைப்போஷித்து வளர்த்துக்கொண்டுவந்த (Oxygen) பிராணபோஷக வாயுவானது அவ்வுறுப்புகள் இயங்காமல் நின்றுவிட்டபிறகு அந்ததேகத்தின் பௌதிகப்பொருள்களையெல்லாம் அணுவணுவாகப்பிரித்துக் கட்டமைதியை நிலைகுலையச்செய்யும்.

"தங்குவெண்டாமரைக்குத் தந்தைதாயிரவிதண்ணீ
ரங்கதைக்கொய்துபோட்டா லந்நீரழுகக்கொல்லுந்
தங்கவெங்கரையிற்சேர்த்தாற் சூரியன்காய்துகொல்வான்
தங்கடநிலைமைகெட்டா லிப்படித்தயங்குவாரே."

தாமரையானது தடாகத்தில் ஜீவித்திருக்கும்வரையில் சூரியனாலும் தண்ணீராலும் போஷிக்கப்பட்டுவருகின்றது. அத்தாமரையை அறுத்து அத்தண்ணீரிலேயே போடுவோமாகில் அத்தண்ணீரே அதை அழுகச்செய்யும், அல்லது கரையில் போட்டால் சூரியன் காய்ந்துஉதவியற்றதாக்கி விடுவானென்று கூறியுள்ள செய்யுளையே இவ்விஷயத்திற்கு உபமானமாகக்கூறலாம்.

தேகம் உயிரோடுகூடியிருந்தபோது அதன் அசுத்தங்களையெல்லாம் போக்கி அதைப்போஷித்து அதற்கு ஏவற்பணிவிடைசெய்துகொண்டுவந்த(Ozygen)என்னும் பிராண போஷகவாயு உயிர் நீங்கிய பிறகு அத்தேகத்தினிடத்தில் சற்றும் விசுவாசம் பாராட்டாமல்அதை அணுவணுவாகப்பெயர்த்து (Carbonic acid) இருந்தாமிலம், (Ammonia) நவச்சாரம்-ஜலம்-பலவகையான உப்புகெந்தகம் முதலிய சக

பௌதிகப்பொருள்களாகப்பிரிந்துவிடுகின்றது. இவைகளேயன்றித் திண்ணிய எலும்புகளும் பற்களுங்கூட அவ்வாயுவின் கொடுமைக்கு ஆற்றாமல் நாளாவர்த்தியில் பொடிப்பொடியாகி மாய்கின்றன.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**விந்தையானபுஷ்பம்.**—தீயுவாந்தபெக் என்னும் ஓரிடத்திலே பொழுதுக்கொருநிறமுள்ள ஓர்வகை புஷ்பம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. காலையில் அது வெண்மையாகவும், மத்தியானத்தில் சிவப்பாகவும், இராத்திரியில் நீலமாகவுமிருக்கிறது. அது புஷ்பிக்கும் மரம் கொய்யாமர அளவு இருக்கிறது. அதற்கு மத்தியானகாலத்தில் மாத்திரம் வாசனையுண்டு.

**கொலையாளிகளைப்பிடிப்பதற்கோர்வகை.**—பகைமையினாலோ வேறு காரணத்தினாலோ ஒருவனை மற்றொருவன் கொன்றுவிடுவானாகில், கொல்லப்பட்டவனுடைய நேத்திரதாரகாமண்டலமென்னும் கருவிழியில் கொன்றவனுடைய உருவம் பதிந்திருக்குமாயின் அவ்வுருவத்தைக்கொண்டு படம்பிடித்துப் போலீஸார் வேறுவகையினாற்பிடிக்க முடியாதகொலையாளிகளை இங்கிலாந்தில் பிடித்துவருகிறார்கள். கொன்றவனுடைய உருவத்தைக்கொல்லப்பட்டவன் தன்பிராணன் நீங்குகையிற்பார்த்துக்கொண்டேயிருக்க நேரிடுமானால், அவனுடைய உருவம் கண்ணாடிபோன்ற தன் கருவிழியிற் பிரதிபலித்துவிடுகின்றது. அந்நிலையிலேயே அவன் உயிர்நீங்குகிறபடியால் அவனுடையநேத்திர நரம்புகளில் அவ்வுருவம் அப்படியேபதிந்துநிலைத்துவிடுகிறது. இந்த உபாயத்தினால் கொலையாளி இன்னானென்பதை ஒருவாறுயூகித்துப் பிறகு நியாயஸ்தலத்தில் பரிசீலனைநடத்துவதற்கு அநுகூலமாயிருக்கிறதாம்.

**விசித்திரமானஒருபெண்.**—ஐதராபாத்திலே குரூபியான ஒருபெண்ணை 3-அடி நீளமும் 2-அடி அகலமுமுள்ள ஒருபேழையிற்கிடத்தி வேடிக்கைகாட்டி வருகிறார்கள். அவளுக்கு 20-வயதாகியும் அவளுடைய தேகத்தின் நீளமெல்லாம் இரண்டேயடியாம். சதாபடுத்துக்கொண்டிருப்பதேயன்றி அவளுக்கு நிற்கவும் உட்காரவுமுடியாது. அவளுடைய சிரம் மாத்திரம் சாதாரணமாய் நம்முடைய சிரம்போலிருக்கிறது. ஏனைய உறுப்புகள்யாவும் விகாரமாய்க்குறுகியிருக்கின்றன.

**செய்ததுபோற்செய்தவானரம்.**—ஒரு துரைமகள் எழுதுகிறதாவது:— நான் ஏறிச்சென்றமரக்கலத்தின் ஒருபுறத்திலே பெருங்குரங்கொன்றும் சில குட்டிக்குரங்குகளும் கட்டப்பட்டிருந்தன. அம்மரக்கலத்தின் மேற்றட்டிலும் மற்றப்பாகங்களிலும் ஒரு எனத்தில் வர்னக்குழம்புவார்த்து ஒரு குச்சினால் வர்னம்பூசிக்கொண்டிருந்த வேலையாளொருவன் அக்குரங்குகளுக்குச் சற்றுதூரமாக அந்த எனத்தையும் குச்சையும் வைத்துவிட்டுச்சாப்பாட்டுக்குப்போயிருந்தான். அவன்வருவதற்குள்ளாக, அவன் அதுவரையில்செய்துவந்த வேலையைக் கவனமாய்ப் பார்த்திருந்த பெருங்குரங்கு அங்கிருந்த குச்சுமட்டையை அவ்வர்னத்தில் நன்றாய்த்தோய்த்துச் சிறு குரங்குகளுக்குப் பாதாதிகேசம்வரையில் பூசிவிட்டது. அச்சிறுகுரங்குகள் பொறுக்கமுடியாமல் எவ்வளவு கூவியும் அப்பெருங்குரங்கு அவைகளைவிட்டிலது. இதுயாவர்க்கும் பெருநகைப்பையுண்டாக்கியது. ஒருவர்செய்வதைப்போல் செய்யுங்குணம் வானரங்களுக்கியல்பு.

PRINTED AT THE ALBINION PRESS:—MADRAS.